பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 01 புதன்கிழமை (14-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 138

# பூநகரி பாதை விடயம் குறித்து வார இறுதியில் இங்கு பேச்சு!

## ஐ.நா.தூதரக அதிகாரி வருவார்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 14

பூநகரி — சங்குப்பிட்டி பாதை திறப்பது தொடர்பான முக்கிய பேச்சுக்கள் இவ்வார இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றன.

வார இறுதியில் யாழ்ப்பாணம் வரவிருக்கும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக கொழும்பு அலுவலகப் பிரதிநிதி டாக்டர் பீற்றர் நிக்கலெஸ் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் முக்கிய பேச்சுக்களை நடத்தவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பாதை தொடர்பாக அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் கொழும்பு அலுவலகம் தயாரித்த பூர்வாங்க செயல்பாட்டுத் திட்டத்திற்கு ஜெனிவா தலைமையகம் அங்கீகாரம் வழங்கியதை அடுத்து முக்கிய பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

கொழும்பில் தற்சமயம் பேச்சுக்கள் நடத்திவரும் தூதரகத்தின் கொழும்புப் பிரதிநிதி வார இறுதியில் யாழ்ப்பாணம் வர திட்டமிட்டுள்ளதாகவும்—

இங்கு விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் முக்கிய பேச்சுக்களை நடத்திவிட்டு கொழும்பு திரும்பும் அவர் அங்கு அரசாங்கப் பிரதி நிதிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னர் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வார இறுதியில் இங்கு வரும்போது சங்குப்பிட்டிப் பாதையையும் அவர் பார்வையிடத் திட்டமிட்டிருப்பதாகத் தெரியவந்தது. (உ-3)

### உயர்நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து

## பல்கலை. அனுமதி நடைமுறை உடன் திருத்தப்படவிருக்கிறது

### மானிய ஆணைக்குழுவின் பிரதித் தலைவர் தகவல்

கொழும்பு, ஏப். 14

யாழ். பல்கலைக்கழக மாணவனின் வழக்குத் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைய பல்கலைக்கழக அனுமதி சம்பந்தமான நடைமுறை திருத்தப்படவிருக்கிறது.

இது குறித்து பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு ஆராய்ந்து வருவதாக ஆணைக் குழுவின் பதில் தலைவர் பேராசிரியர் ஐ. பாலசூரியா நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைய —

பொறியியல் பீடத்துக்கு மேலதிகமாக மாணவர்களைச் சேர்ப்பது சம்பந்தமான தெரிவு முறைகள், இந்த மாதத்துக்கு முன்னர் திருத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய "லங்கா தீப" பத்திரிகையில் வெளியான செய்தி ஒன்று தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பல்கலைக் கழக அனுமதியை ஒரு வருட காலத்துக்கு ஒத்திவைத்தால் 50 ஆயிரம் மாணவர்களுக்கு கிடைக்க

(9 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதிக்கு அஞ்சலி: நாளை முதல் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஏப். 14

தியாகி அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவாக நாளை வியாழக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை குடாநாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் உண்ணாவிரதம் இருந்து அஞ்சலி செலுத்த உள்ளனர்.

அன்னையின் நினைவாகப் பல இடங்களில் சிரமதானப் பணிகளும் நடைபெறவுள்ளன.

நாளை வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்திலும், கோப்பாய்-புத்தூர் மாவீரர் மண்டபத்திலும் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படும்.

இதேவேளை —

உடுப்பிட்டி — இமையாணன் கிழக்கு சலாம்வீதி புனரமைப்பு, சண்டிலிப்பாய்-மானிப்பாய் மாவீரர் கலையரங்கு வீதி, புனரமைப்பு, சண்டிலிப்பாய் வடக்கு தமிழ் கலவன் பாடசாலை துப்பரவு செய்தல், லெப். கேணல் பொன்னம்மான் சிறுவர் பாடசாலை துப்பரவு செய்தல், உயரப்புலம் பாரதி வீதி புனரமைப்பு, மானிப்பாய் புலவர் முகாம் துப்பரவு செய்தல் ஆகிய சிரமதானப் பணிகளும் நாளை இடம்பெறவுள்ளன.

## தேர்தல் முடிவுகள் குறித்து புலனாய்வு அறிக்கைகள்

கொழும்பு, ஏப். 14

தென் மாகாணசபை, சப்ரகமுவா மாகாணசபை ஆகியவற்றை மீண்டும் கைப்பற்றும் வாய்ப்பு ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மிகவும் குறைவாக உள்ளது.

—இவ்வாறு அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புலனாய்வு அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டுள்ளது.

வடமத்திய மாகாண சபையை மீண்டும் கைப்பற்றக் கூடிய நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி இருப்பதாகவும் புலனாய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

ஏனைய மாகாண சபைகளுக்கான தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, [illegible] முன்னணி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகியவற்றுக்கு இடையே கடும் போட்டி நிலவுகிறது என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அரசியல் கட்சிகள் நடத்திய கருத்துக் கணிப்புகளும் இதனையே தெரிவிக்கின்றன என்றும் "சண்டே ஐலண்ட்" தெரிவித்துள்ளது.

## கிளாலியில் மோதல்

யாழ்ப்பாணம், ஏப். 14

கிளாலி கடற் பிராந்தியத்தில் நேற்று இரவு 7 30 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும், கடற்படையினருக்கும் இடையில் மோதல் இடம் பெற்றது.

பயணிகள் படகுகளை நோக்கி கடற்படை படகுகள் தாக்குதல் நடத்த முற்பட்ட சமயமே மோதல் வெடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை—

நேற்று முன் தினம் இரவு 9 மணியளவிலும் கிளாலிக் கடற்பரப்பில் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் மோதல் சம்பவங்கள் இடம் பெற்றதாக தெரிய வந்தது. (உ-3-15-117)

### வடக்கு - கிழக்குப் பகுதிகளில்

## தாக்குதலை முறியடிக்க படையினர் தயார் நிலையில்!

கொழும்பு, ஏப், 14

வடக்கு - கிழக்கில் அல்லது எல்லைப்பகுதிகளில் விடுதலைப் புலிகள் நடத்தத் திட்டமிட்டுள்ள திடீர்த் தாக்குதல்களை முறியடிக்க முப்படைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று முன்கண்ட செய்தியை வெளியிட்டுள்ளது.

புத்தாண்டு காலத்தில் திடீர் தாக்குதல்களை நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஒ-எ)

## கிழக்கில் போட்டியிட பெருமாள் விருப்பம்

கிழக்கு மாகாணத்துக்கு என தனியாக ஒரு மாகாண சபை அமைக்கப்பட்டு, அதற்காக நடத்தப்படும் தேர்தலில் போட்டியிட வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் திரு. பெருமாள் தமது இந்த எண்ணத்தை வெளியிட்டிருப்பதாக "சண்டே ஒப்சேர்வர்" பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது. (இ-எ)

## தொண்டர் நிறுவனங்களின் ஊழியர் கண்டனப் பேரணி

### வெள்ளியன்று யாழ்நகரில்

யாழ்ப்பாணம், ஏப். 14

செஞ்சிலுவை அதிகாரி திரு. புவனேந்திரன் ஸ்ரீலங்காப் படையினரால் படுகொலையுண்டதைக் கண்டித்தும்—

இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுப்பதை வலியுறுத்தக் கோரியும்—

யாழ் மாவட்டத்தில் உள்ள தொண்டு மற்றும் சமூக சேவை நிறுவனங்களின் பணியாளர்கள் ஒன்றிணைந்து நாளை மறுதினம் யாழ். நகரில் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்

தொண்டு மற்றும் சமூக சேவை நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேற்று யாழ். வை. எம். சீ. ஏ மண்டபத்தில் நடத்திய கூட்டத்தில் இது பற்றித் தீர்மானிக்கப்பட்டது.

பேரணி காலை 9 மணிக்கு நல்லூர் கோயிலில் இருந்து ஆரம்பமாகி யாழ். செயலகத்

(9 ஆம் பக்கம் பார்க்க)

### புத்தாண்டு சோபனங்கள்

ஸ்ரீமுக வருடம் தனது திருமுகத்தைக் காட்டியுள்ள இன்றைய சித்திரைப் புத்தாண்டு நன்னாளிலே—

உதயன்—

தனது வாசக நேயர்கள், விளம்பரதாரர்கள், விற்பனையாளர்கள், செய்தியாளர்கள், எழுத்தாளர்கள், அபிமானிகள், ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் தனது இதயங் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறான்.

## வன்னியில் மண்மீட்பு நிதி கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 14

வன்னிப் பகுதி மக்களிடம் தமிழீழ மண் மீட்பு நிதி கோரி கலந்துரையாடல்களும் கருத்துரைக் கூட்டங்களும் இடம்பெற்று வருகின்றன

வன்னிப் பகுதியின் கிளிநொச்சிக் கோட்டத்தில் நடைபெற்றுவரும் கூட்டங்களில் தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி, வன்னி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. மனோ, துணைப் பொறுப்பாளர் திரு. ஞானம் ஆகியோர் கலந்து கொண்டு வருகின்றனர். (உ-த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மருதடி விநாயகனை தேரில் தரிசிப்போம்

மானிப்பாய் மருதடி விநாயகரைப் பற்றி அறியாதவர் யாருமே இருக்க முடியாது. யாழ். குடாநாட்டிலே காங்கேசன்துறைக்கும் சுன்னாகத்திற்கும் அண்மித்து யாழ்ப்பாணத்திற்கு வடபால் அமைந்துள்ள ஓர் சிறந்த விநாயகர் தலமாகும்.

இன்று புதன்கிழமை (14-04-1993) பஞ்சமுக விநாயகர் தேரில் ஏறி காட்சி அளிக்கும் ஆனந்தம் ஆண்டு முழுவதும் நினைந்து நினைந்து மகிழ வேண்டிய, ஓர் மகிழ்ச்சியான நாளாகும். ஆணவம், கன்மம், மாயை இவைகளை களைந்து மக்களை சத்வ குணத்தில்

நியாய சிரோமணி,
சி. சுப்பிரமணிய - சாஸ்திரிகள்

இட்டுச் சென்று நல்லோராக்குவதே தேர்த்திருவிழா அல்லது ரதோற்சவமாகும்.

பிரம்மோற்சவத்தில் சப்பறம், வேட்டைத்திருவிழா,

(6 ஆம் பக்கம் பார்க்க)


யாழ். செஞ்சிலுவைச் சங்க உப தலைவர்
திரு. கு. புவனேந்திரன் அவர்களின்
படுகொலைக்காக
சிறிலங்கா அரசைக் கண்டித்தும்
சர்வதேச யுத்த விதிமுறைகள்
பேணப்படுவதை உறுதிப்படுத்துமாறு
சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைக்
கோரியும்
சமூக சேவை அமைப்புகளின்
தொண்டர்களும் பணியாளர்களும்
நடத்தும்

## ஆர்ப்பாட்டப் பேரணி

காலம்: 16 - 04 - 93 வெள்ளிக்கிழமை
காலை 9 மணி

இடம்: நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றல்

மக்கள் பல நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ள வேளையில் அவர்களுக்கான சேவைகளில் ஈடுபட்டு வருகின்ற சமூக சேவை அமைப்புகளின் தொண்டர்களும், பணியாளர்கள் அனைவரும் தங்கள் தங்கள் சீருடைகள், அடையாளச் சின்னங்களை அணிந்து பேரணியில் கலந்து கொண்டு எமது அதிருப்தியைத் தெரிவிக்க அணிதிரள்வோம்.

செயலாளர்,
சமூக சேவை அமைப்புகளின்
தொண்டர்கள் பணியாளர் ஒன்றியம்.

14 - 04 - 93. (சி-4847)


## தமிழ் இசைவிழா நிகழ்ச்சிகள்

யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத் தமிழ் இசைவிழாவின் 8ஆம் நாள் நிகழ்ச்சிகள் இன்று புதன் இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும். இன்றைய நிகழ்ச்சிகளில் பாட்டு, வாத்தியக் கச்சேரிகள் இடம்பெறும்.

நாளை வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு ஆரம்பிக்கும் 9 ஆம் நாள் நிகழ்ச்சிகளில் அண்ணாமலை இசைக் கல்லூரி மாணவர்களின் பாட்டு, வீணைக் கச்சேரிகளும் மற்றும் வாத்தியக் கச்சேரியும் இடம்பெறும். [க-111]

## இன்று

கொழும்புத்துறை, ஏப். 14

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் 42 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணி முதல் பாலர் பாடசாலை சிறுவர் விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

நாளை பிற்பகல் 3 மணிக்கும் விளையாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெறும். இரவு 7 மணிக்கு விசேட சொற்பொழிவுகள், பட்டிமன்றம், நடன நிகழ்ச்சி, நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (க-30)

o o o

கோண்டாவில் மேற்கு வேத பாராயண சனசமூக நிலையம் நடத்தும் புத்தாண்டு விழாக் கொண்டாட்டம் இன்று மாலை நிலைய முன்றலில் நடைபெறும். (க)

o o o

புத்தாண்டு தினமான இன்று நல்லை ஆதீனத்தில் காலை 6 மணிக்கு பொங்கலும், ஆராதனையும் நடைபெறும்.

பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஆதீன புராண படன சபையினரின் "கந்தபுராண படன" ஆரம்ப விழா நடைபெறும். (க-30)

### வடமாகாண தபாலகங்களின்

## அன்றாட கணக்குவிவரம்; இங்கு மேற்கொள்ளப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 14

வடமாகாணத்தில் உள்ள தபாலகங்களின் அன்றாட கணக்கு விவரங்கள் சம்பந்தமான அலுவல்கள் விரைவில் வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்தின் கீழ் இயங்கும் கணக்காளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது இக்கணக்கு விவரங்கள், கொழும்பிலுள்ள தபால் திணைக்கள காசுக் கணக்குக் கிளை அலுவலகத்திற்கு அன்றாடம் அனுப்பப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் கொழும்பில் பேச்சுக்கள் நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-162)

## தபால் பொதிகள் இறக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஏப் 14

'வாதுவ' கப்பலில் எடுத்து வரப்பட்ட 86 தபால் பொதிகளும் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு நேற்று யாழ். தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டன.

தபால்கள் தரம்பிரிக்கப்பட்டு நாளை வியாழக்கிழமை விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-109,-162]


கோல்ட் ஸ்ரார் விளையாட்டு கழகத்தின்
புதுவருட தின

## உதைபந்தாட்டமும்- கோழிச்சண்டை போட்டியும்

இடம்: கோல்ட்ஸ்ரார் மைதானம்
(ஆஸ்பத்திரியடி சந்தி, கோப்பாய் வடக்கு)
காலம்: 14-4-93 புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு

உதைபந்தாட்டம்

ஸ்ரீமுருகன் — விண்மீன் (வடமராட்சி)
பாடுமீன் — சென்றோக் (25-4-93 அன்று)

14-3-93 அன்று நடைபெற்ற சவாரிப் போட்டிக்கான பரிசில்கள் 5-5-93 அன்று வழங்கப்படும்.

R. ஆனந்தகுமார்
T. அழகேசன்

(25248)



மலரும் சித்திரை புதுவருடத்தில் அனைவருக்கும்

## எமது இனிய நல்வாழ்த்துக்கள்

வாங்கிடுவீர் பனைவெல்லம்
வளர்த்திடுவோம் சுயசார்பில்!

தரமான, சுத்தமான, தித்திக்கும் வெல்லங்களை வாங்க நாடுங்கள்! **பனை வெல்லம்**

சகல தெங்கு ப. பொ. உ. வி. கூ. சங்க தலைமை அலுவலகங்கள், சகல தெங்கு ப. பொ. கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி தலைமை அலுவலகங்கள், மத்திய சந்தைப் படுத்தல் பிரிவு களஞ்சியத்திலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

மொத்த விலை கிலோ ரூபா 38/- சில்லறை விலை 40/-

## வெல்ல சில்லறை விற்பனை நிலையங்கள்

| | |
|---|---|
| 1) யாழ். பகுதி கொத்தணி:- | சுண்டுக்குளி, பல்பொருள் அங்காடி சுண்டுக்குளி, பாலசிங்கம் விடுதி உணவுச்சாலை யாழ்/பல்கலைக் கழகம். |
| 2) அரியாலைச் சங்கம்:- | அரிகோப் பனம்பொருள் அங்காடி மாம்பழம் சந்தி அரியாலை |
| 3) யாழ்ப்பாணம் சங்கம்:- | பனம்பொருள் விற்பனவு நிலையம், நாவலர் வீதி, நாவாந்துறை. |
| 4) கோப்பாய் சங்கம்:- | கூட்டுறவு அங்காடி, இருபாலைச் சந்தி, இருபாலை. |
| 5) வலிகாமம் கொத்தணி:- | வலி கொத்தணி விற்பனவு நிலையம், அம்பாள் கடை, சங்கானை |
| 6) மானிப்பாய் சங்கம்:- | மானி. - கோப் வைத்தியசாலை முன்பாக மானிப்பாய் |
| 7) கோண்டாவில் சங்கம்:- | கற்பகதரு விற்பனை நிலையம் / களஞ்சியம் தாவடிச் சந்தி, கோண்டாவில் |
| 8) சங்கானை சங்கம்:- | பனம்பொருள் விற்பனை நிலையம் அராலி வீதி, சங்கானை. |
| 9) அளவெட்டி / மல்லாகம் சங்கம்:- | கற்பகதருவின் விற்பனை நிலையம் ஸ்ரேசன் வீதி, சுன்னாகம். |
| 10) சாவகச்சேரி சங்கம்:- | பொற்பதி விற்பனை நிலையம், இல 2. பஸ்நிலையம் சாவகச்சேரி. |
| 11) கொடிகாமம் சங்கம்:- | சேவை நிலையம் கச்சாய் வீதி, கொடிகாமம் |
| 12) பளை சங்கம்:- | பனம்பொருள் விற்பனை நிலையம் பஸ்நிலையம், பளை. |
| 13) அச்சுவேலி சங்கம்:- | கற்பகம் மொத்த விற்பனை நிலையம் அச்சுவேலி; |
| 14) கட்டைவேலி சங்கம்:- | பனையகம், கொடிகாமம் வீதி, நெல்லியடி. |
| 15) பருத்தித்துறை சங்கம்:- | மொத்த விற்பனை நிலையம், பரு. தெ. ப. பொ. கூ. சங்கம், மந்திகை. |
| 16) சமாஜம்:- | சந்தைப்படுத்தல் பிரிவு. வடமாகாண தெ. ப பொ. சமாஜம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். |

யாழ். பகுதி தெங்கு பனம் பொருள்
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

விளம்பர அன்பளிப்பு:-
1. யாழ். மாநகர தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்
2. வலி. கிழக்கு தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்
3. அரியாலை தெ.ப.பொ. உ. வி. கூ. சங்கம் (கோப்பாய்)

(25249)



"எங்கும் பொலிக இனிய தமிழ்"

## யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 35-ஆவது ஆண்டு தமிழ் இசை விழா

இடம்: நல்லூர் பண்டாரக்குளம் பிள்ளையார் கோவில் முன்றல்

காலம்: 14 - 04 - 93 புதன்கிழமை
(எட்டாம் நாள் நிகழ்ச்சிகள்)

மாலை 7-00 மணி

செல்வி சந்தானலட்சுமி தம்பிராசா — பாட்டு
திரு. பி. பத்மநாதன் — வயலின்
திரு. ச. ஹரிகரன் — மிருதங்கம்

7-30 மணி

திருமதி வாஸஸ்பதி ரஜீந்திரன் — பாட்டு
திரு. R. S. கேசவமூர்த்தி — வயலின்
திரு. சதா. வேல்மாறன் — மிருதங்கம்

8-15 — 9-30 மணி

திரு. அ. நமசிவாயம் — புல்லாங்குழல்
செல்வி பாக்கியலட்சுமி நடராஜா — வயலின்
திரு. க. கண்ணதாசன் — மிருதங்கம்
திரு. பி. ரவீந்திரன் — தவில்
செல்வன் ப. ரதிரூபன் — கடம்

காலம்: 15 - 04 - 1993 வியாழக்கிழமை
(ஒன்பதாம் நாள் நிகழ்ச்சிகள்)

மாலை 7-30 மணி

அ. இசைக் கல்லூரி மாணவர்கள் } பாட்டு, வீணை.

8-00 மணி

செல்வி ஞானேஸ்வரி பரமு — பாட்டு
செல்வி பாக்கியலட்சுமி நடராஜா — வயலின்
திரு. து. ராஜன் — மிருதங்கம்

8-45 — 10-00 மணி

திரு. மு. வர்ணகுலசிங்கம் } — பாட்டு
திரு. வர்ண ராமேஸ்வரன் }
திரு. S. கோபிதாஸ் — வயலின்
திரு. S. மகேந்திரன் — மிருதங்கம்
திரு. S. துரைராஜா — கஞ்சிரா
திரு. வேல்மாறன் — கடம்

எங்கும் இன்தமிழ் பொலிய வாழ்த்துவோர்

★ சோதி ரெக்ஸைல்ஸ்
14, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
கிளை ஸ்தாபனம் - இணுவில்

★ ரவி அன்ட் ராஜ் சில்க்ஸ்
77, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

★ ராசி சில்க்ஸ்
70, நவீன சந்தை.
யாழ்ப்பாணம்.

★ சீமாட்டி
122 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(25243)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ உதயன் ஸ்ரீமுக புத்தாண்டுச் சிறப்பிதழ் ★

## புத்தாண்டில் பூரித்த உள்ளமும் புனர்வாழ்வும் பிறப்பதாக!

போனது போகட்டும் புத்தாண்டு மலரட்டும் என்று எண்ணியிருந்த பல்லாயிரவர் உள்ளம் குளிர ஸ்ரீமுக ஆண்டு பிறந்துள்ளது. பெயரளவில் திருமகள் கடாட்சம் உண்டு. சுபீட்சமும் செல்வமும் விளைவும் வளமும் உண்டாகும் என்று கருதுவோமாக.

எங்கள் வாழ்விலும் நாகரிகத்திலும் நாள், வாரம், மாதம், வருடம் என்பன காலதத்துவத்தில் வந்து போகின்றன. கண்ணால் காண முடியாத காலத்தை நம்மவர் கணித்து வரையறை செய்துள்ளார்கள்.

கால ஆண்டை தமிழர், தெலுங்கர், ஆங்கிலேயர் பலவிதமாகக் கணித்துள்ளார்கள். எங்கள் பழைய பண்பாட்டில் கலி, சாதவாகனர், திருவள்ளுவர், மெய்கண்டார் முதலான ஆண்டுக் கணிப்புகள் உள்ளன.

இன்று உலகம் முழுவதும் கிறிஸ்து ஆண்டு என்னும் காலவரையறையே பொதுவாக நிலவுகிறது அதில் எண்ணிக்கையே கருதப்படுகிறது. நாங்கள் அதனோடு மருவி எங்கள் காலத்தை அறுபது ஆண்டுகளாக வகுத்துப் பெயரிட்டு வழங்குகிறோம். அவை மாறி மாறி வந்து போகின்றன. அவற்றின் பெயர்கள் அறுபதும் நாரதர் பெற்ற மைந்தர்களின் பெயர்களாக உள்ளன.

நாரதர் செய்த குறும்புத்தனத்தால் அனசூயையிடம் சாபம் பெற்றுப் பெண்ணானார் என்பது பழைய கதை. எங்கள் ஆண்டுகள் பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத என்றெல்லாம் மாறி மாறிச் சகடக்கால்போல வரும்.

ஆவணியில் வருடப் பிறப்பு

முற்காலத்தில் ஆவணி மாதமே வருடப்பிறப்புக்குரிய மாதமாக, முதற்றிங்களாக மலர்ந்தது, சூரியன் சிங்கராசியில் இருப்பதைச் சிறப்பாகக் கருதியவர்கள் அவ்வாறு வகுத்தனர். இன்று ஜனவரி மாதத்தை முதலாகக் கொள்ளும் ஐரோப்பியர் அன்று மார்ச் மாதத்தை முதலாகக் கொண்டனர்.

கார்த்திகை நட்சத்திரத்தை முன்விட்டு எண்ணிய நாம் இன்று அச்சுவினியை முதலில் எண்ணுகிறோம். எதை முதலில் எண்ணினாலும் எல்லாம் சமத்துவமான பெருமை உடையனவே. First among the Equals )

சித்திரை மாதத்துக்கு ஏற்றம் கணிப்பவர்கள் பன்னிரு இராசிகளுள் மேடம் இம் மாதத்தோடு மருவியுள்ளது என்கிறார்கள். சித்திரை மாதம் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், உமாபதி சிவாசாரியர் முதலானோராலும், பெரிய புராண அரங்கேற்றத்தாலும் இன்னும் பல வேறு சிறப்பு நிகழ்ச்சிகளாலும் பெயர் பெற்றதாகும். இன்னும் சித்திரையில் வருகின்ற பூரணை மிகச் சிறப்பு வாய்ந்ததாகும்.

பொலிவான காலம்

நாங்கள் செய்வனவும் நினைப்பனவும் வரிநெடும் புத்தகம் ஒன்றில் பதியப்பட்டுத் தருந்த பரிசோ, தண்டனையோ தரப்படும் என்பது முழுதும் உண்மை. இனி நாம் செய்ய வேண்டியவற்றுக்குச் சங்கற்பம் செய்வதற்குப் புத்தாண்டு பொலிவான காலமாகும்.

போன ஆண்டோடு எங்கள் மனக்குறைகள், கோணற் சிந்

(4ஆம் பக்கம் பார்க்க)

க. சி குலரத்தினம்

### சிறீமுகமே! வா!

புத்த மதம் ஓங்கி வளர் புனித மிகுந் தீவிதென்று
சொல்லிச் சொல்லி
யுத்த 'மதம்' ஊட்டிவரும் சூழ்ச்சியுடைத் தலைவர்
களின் சுறட்டை நீக்கி,
இத்தரையில் வாழ்ந்து வரும் செந் தமிழர் தொல்
குடிகள் என்னும் உண்மை
நித்தியமே, நிச்சயமே என்பதனைச் சிறீமுகமே
நிலை செய்வாய், வா!

குடி கொண்ட நாள் தொட்டு கோவிலொடு-
குளங்கண்டு வளமுங்கண்டு
முடி கொண்டு முறைசெய்து மூவாதமுத்தமிழின்
இனிமை கண்டு
நடை கொண்டு தடை வென்று நற்பண்பின் அடி-
கண்டு நலமுங் கண்டு
கொடி கொண்டு சிறீமுகமே! கோலோச்சி நாம்-
வாழ்ந்த கதை சொல்வாய் வா!

முத்தனைய இலங்கையினில் இரத்த நதி ஓடவிடும்
யுத்தம் வேண்டாம்
கத்தியொடு துப்பாக்கி கைக்குண்டு வான் தொடுக்கும்
சத்தம் வேண்டாம்
சத்தியத்தில் ஊறிவரும் தனியாட்சி தமிழாட்சி
நித்தம் வேண்டும்
சித்திரையில் வந்துதிக்கும் சிறீமுகமே செழுஞ்சுடரே
தருவாய் நீ வா!

— சிற்பி —



## காலத்துக்கு ஏற்றபடி கொடுத்தல் எமது மண்ணின் இன்றைய தேவை

காலக் கணக்கின் ஒரு பகுதியாக அமைவது ஆண்டுக் கணக்கு. ஓராண்டு காலம் முடிவடைந்து, இன்று புதிய ஆண்டு பிறக்கிறது.

புதிய ஆண்டு எமக்குப் புது வாழ்வைக் கொடுக்கவேண்டுமென இறைவனை வேண்டும் அதே வேளையில் எம்முடைய மண்ணிலே இடம் பெயர்ந்தும், பெருந்துன்பங்களுக்குட்பட்டும் பல ஆயிரம் தமிழ் மக்கள் அல்லற்படுவதை நாம் மறந்துவிட முடியாது. இத்தகைய மக்களுக்கு எம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும் என்பதையும் இப் புத்தாண்டு வேளையிலே சிந்திப்பது பொருத்தமாகும். இது காலத்தாற் செய்த உதவியாகும். இவ்வுதவி அவரவர்க்கேற்றபடி அமையலாம். பசித்து வருபவர்களுக்கு உணவு கொடுத்தாலே போதும். இதற்கு ஓர் இலக்கிய எடுத்துக்காட்டினைத் தருகிறேன்.

பாரிய மன்னன் எவ்வளவு கொடையாளியாக இருந்து புகழ்பெற்றானோ அந்தளவுக்குத் தன்னுடைய குணத்தாலே புகழ்பெற்றவன் 'பாரி' என்னும் பெயர் கொண்ட ஓர் இடையன். இவனுக்கு அங்கவை, சங்கவை என்னும் பெயர் கொண்ட மகள் இருவர் இருந்தனர். இவ்விடையன் வீட்டுக்கு ஔவையார் ஒரு நாள் சென்றார்.

அன்று பாரி வீட்டில் இல்லை. அங்கவையும் சங்கவையுந்தான் இருந்தார்கள். ஔவையாரைக் கண்ட பெண்கள் இருவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் புலவரை வரவேற்றனர். ஏழைக் குடும்பத்தவராயினும் செம்மைசேர் குணமுடையவர் அவர். எனவே புலவர் ஒருவருக்குச் செய்ய வேண்டிய சீர்களைத் தம்மளவிலே செய்யலாயினர். நடந்து களைப்படைந்து வந்த புலவருக்கு அவருடைய களை தீர முதலிலே உணவளித்தனர். தாம் அன்று என்ன சமைத்து உண்டார்களோ அதனையே ஔவையாருக்கும் உணவாகக் கொடுத்தனர். அன்று அவர்களுடைய உணவுக்கறி, நெய்யுடன் கலந்து செய்யப்பட்ட கீரை தான். ஔவையாருக்கு அதுவேவழங்கப்பட்டது. மிகுந்த ஆர்வத்துடனும் மகிழ்வுடனும் ஔவையார் அக்கீரையை உண்டார்.

செறிந்த கையார்

உணவாலே மனம் மகிழ்ந்த ஔவைக்கு, அவ்விரு பெண்களும் தங்களுடைய ஒரு நீலச் சிற்றாடையை அன்பளிப்பாகக் கொடுத்தனர். அதை வாங்கிக் கொண்ட ஔவைக்கு மகிழ்ச்சியோ கட்டுக்கடங்காது ஆகிவிட்டது. அவள் அப்பெண்கள் இருவரையும் பாடல்களிலே அமரர்களாக்கிவிட்டாள் அப் பெண்கள் இட்ட உணவை வியந்து ஔவை,

வெய்தாய் நறுவிதாய்
வேண்டளவும் தின்பதாய்
நெய்தான் அளாவி
நிறம் பசந்த — பொய்யா
அடகு என்று சொல்லி
அமுதத்தை இட்டார்
கடகம் செறிந்தகை
யார்

என்று பாடினார். ''வளையல் அணிந்த அங்கவை, சங்கவை என்னும் பெண்கள் வெப்பமுடையதாகவும், நல்ல மணமுடையதாகவும் விரும்பிய வரையில் தின்றாலும் கெடுதியை உண்டாக்காததாகவும், நெய்யுடன் கலந்து செய்யப்பட்ட கீரைக்கறி எனச் சொல்லி, அமுதத்தையல்லவோ இலையிலே படைத்தார்கள்.''

இவ்வாறு, பசியை உணர்ந்து எளிமையாகப் படைத்த கறி ஔவையாருக்கு அமுதமாகியது போல், பசியுடையயார்க்குமே அமுதமாகும் என்பதிலே ஐயமில்லை.

நீலச்சிற்றாடை

அங்கவையும், சங்கவையும் கொடுத்த நீலச் சிற்றாடை ஔவைக்கு பெரியதொரு கொடையாகவும், பேரன்புச் செயலாகவும், உரிமை பாராட்டி வழங்கிய பொருளாகவும் அமைந்ததைப் பின் வரும் பாடலிலே அவர் கூறுகின்றார்.

பாரி பறித்த பறியும்
பழையனூர்க்
காரி கொடுத்த
களைக்கொட்டும் —
சேரமான்
வாராய் என அழைத்த
வாய்மையும், இம்மூன்றும்
நீலச்சிற் றாடைக்கு நேர்.

ஔவைக்கு இந் நீலச்சிற்றாடை மூன்று வள்ளல்கள் தனக்குக் காட்டிய பரிவுக்கு ஒத்ததாயிருந்தது. ''பாரி'' என்னும் மன்னன் தன்னை விட்டுப் பிரியக்கூடாது என்று தடுப்பதற்காக ஆடையைப் பிடித்து இழுத்ததும், பழையனூரில் வாழ்ந்த காரி என்னும் உழவன் உரிமை பாராட்டித் தன்னைப் போலவே பயிரின் களையைப் பறிக்குமாறு கொடுத்த களைக்கொட்டும், சேரமன்னன் 'வருக' என்று அழைத்த உண்மையான அன்புச் செயலும் என்ற இந்த மூன்றும் அங்கவை, சங்கவை என்னும் பெண்கள் தந்த நீலநிறச் சிறிய ஆடைக்குச் சம

( 6ஆம் பக்கம் பார்க்க)

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தலைவர்: தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

## மங்கல வாழ்வு தரும் புத்தாண்டு வருகவே

தமிழ் மக்களுடைய வாழ்க்கையிலே விழாக்களும் பண்டிகைகளும் முக்கிய இடம் பெறுகின்றன. சைவ சமயத்தவர்கள் புதுவருடப் பிறப்பை பரம்பரை பரம்பரையாக சிறப்பாகக் கொண்டாடி வந்துள்ளனர். நல்லன பல நடைபெறும் என்ற நம்பிக்கையுடனும், தமது எதிர்பார்ப்புகள் வெற்றிகரமாகக் கைகூடும் என்ற மகிழ்வுடனும் புத்தாண்டைக் கொண்டாடினர். புது வருடத்தைக் கணித்துக் கொள்வதில் மதரீதியான கருத்து வேறுபாடுகள் உள. தமிழ் மக்கள் விசேடமாக சைவமக்கள் மேட ராசியிலிருந்து மீன ராசிவரை சூரியன் சஞ்சரிக்கும் காலங்களை பன்னிரு மாதங்களாக வகுத்து ஒரு வருடமாகக் கணித்துள்ளனர். ஆங்கில ஏப்ரல் மாத நடுப் பகுதியில் சித்திரை மாதப் பிறப்புடன் புதுவருடம் ஆரம்பமாகிறது. இம்முறை ஏப்ரல் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முன்னிரவு ஸ்ரீமுக வருடம் பிறக்கிறது.

புதுவருடத்தை கொண்டாடும் நிலையில் இல்லங்களை புதுப்பொலிவு பெறச் செய்து, மங்களகரமாகக் காட்சியளிக்கும் முறையில் கோலமிட்டு, விளக்கேற்றி, மாவிலை தோரணம் தொங்க விட்டு பொங்கி, விருந்துண்பது வழக்கம். கடந்த வருடத்தில் எமக்கு ஏற்பட்ட துன்பங்கள் கஷ்ட, நஷ்டங்கள், பகை என்பன நீங்கி வாழ்க்கையை சீரிய நெறியில் அமைக்க புத்தாண்டு ஏற்ற சந்தர்ப்பமாக அமைகிறது.

புத்தாண்டைத் தொடர்ந்து சில தினங்களுக்கு புத்தாண்டு தொடர்பான பல நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. மனித நேயத்துடன் வாழவும், பெரியோர்களைப் போற்றவும், கலாசாரப் பண்களைப் பேணவும், தானதர்மங்கள் செய்யவும் புத்தாண்டு ஏற்ற சந்தர்ப்பமாகிறது. தாய், தந்தையர், ஆசிரியர், சிவாசாரியார் ஆகியோரிடமிருந்து ஆசி பெறுவது ஒரு சிறந்த நிகழ்ச்சியாக அமைகிறது. அடுத்ததாக நாள் வேலை, வியாபாரம் ஆரம்பித்தல் புதிய [illegible] தொடங்குதல், கணக்குப் பதிதல் என்பன சுபவேளையில் ஆரம்பிக்கப்படுகிறது. முதன் முதலாக நல்ல தினத்திலே பெரியவர்களிடம் கை விசேஷம் பெறும் நிகழ்ச்சியும் இடம் பெறுகிறது.

உறவினர், நண்பர்களை அழைத்து உணவு பரிமாறுவதும், ஆதரவு அற்றவர்களுக்கு அன்னதானம் செய்வதும் நீண்ட காலமாகக் கைக்கொள்ளப்பட்டுள்ளது, உறவினர்கள், நண்பர்கள் இல்லங்களுக்குச் சென்று உறவாடி, உரையாடி மகிழ்தல் என்பன வருடம் முழுவதும் மக்களிடையே நல்லுறவைப் பேண வழிவகுக்கிறது.

புத்தாண்டு மாலை சிறுவர்கள் பல விளையாட்டுகளில் ஈடுபடுபவர், பெரும்பாலும் போர்த் தேங்காய் அடித்து விளையாடும் வழக்கம் மிக அண்மைக் காலம் வரை நிலைத்திருந்தது. எனவே வருக புத்தாண்டே! அமைதியான வாழ்வு தருவாய் [illegible]

திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்

### கை கொடுப்பாயா?

சித்திரை அணங்கே,
செந் நிலமிது.
தமிழ் மண்ணின்,
கோலமிது.
போரின் அழிவைப்,
பார்த்து வா.
வீதிகளில்,
விழுந்து விடாதே;
குண்டுகள் தோண்டிய,
கிடங்குகளிருக்கு;
கற்களும் தடக்கும்,
கவனித்து வா.
கடவுளை,
கத்துகிறான்.
அருமை மக்களை,
இழந்ததனால்!
அவனைத் தேற்றி,
எம்மிடம் வா.
சித்திரை மாதத்து,
ஸ்ரீமுக அணங்கே,
பட்சணமின்றி,
புத்தாடையின்றி,
பரணிப் பாடலோடு,
வஞ்சியே!
வரவேற்கின்றோம்.

—மீசாலையூர் கமலா.

### சிரித்து வா நீ!

சிரித்து வா நீ
ஸ்ரீமுக ஆண்டே
சிறந்து வா நீ
சுந்தர ஆண்டே
பரந்த உலகின்
பெருமைத் தமிழர்
புகழொடு இங்கே
வாழ்ந்திட வேண்டும்
விரிந்த வானாய்
இதயம் விளங்கி
விரும்பும் அமைதி
நிலவிட வேண்டும்
புரிந்து கொள்ளும்
உணர்வு எங்கும்
பெருகி அகிலம்
உயர்ந்திட வேண்டும்!

நாயன்மார்கட்டு
ப. மகேந்திரதாசன்.

### சிறந்திடு இன்பம் தந்து

ஒருமுக மாக
மக்கள்
உறுதி யோடு
உள்ளனர்
திருமுகம் மலரும்!
எங்கள்
தீந்தமிழ் ஈழம்
காண்போம்
மறைமுக மாக
எம்மை
வதைத்தது போதும்
நல்ல
சிறீமுக ஆண்டே
வந்து
சிறந்திடு இன்பம்
தந்து!

- வ. யோகானந்தசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ உதயன் ஸ்ரீமுக புத்தாண்டுச் சிறப்பிதழ் ★


மாணவ, மாணவிகளுக்கு

**எமது புதுவருட வாழ்த்துக்கள்**

விஞ்ஞானம் — திரு. J. R. சூரி
சமூகக்கல்வியும் வரலாறும் — திரு. K. கோபி

**★ ஆர். சி. கே. மில் ★**

இல. 233, கே. கே. எஸ் வீதி, சுன்னாகம்.

எமது
**புத்தாண்டு வாழ்த்துக்களை**
வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-2005)

**★ நியூ சித்திரகலா ★**

ஸ்ருடியோ & வீடியோ
இல. 70, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

எமது
**புத்தாண்டு வாழ்த்துக்களை**
வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-2004)

**★ சபரிநாதன் மில் ★**

இல. 111, ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

எமது
**புத்தாண்டு வாழ்த்துக்களை**
வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-2003)

**கீதா எரிபொருள் விற்பனை நிலையம்**

கே. கே. எஸ். வீதி,
[பழைய பொலீஸ் நிலையம் முன்பாக]
சுன்னாகம்.

உளம் கனிந்த
**புத்தாண்டு வாழ்த்துக்களை**
வாடிக்கையாளர், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-2001)


## சித்திரையே தீர்வு கிடைக்குமா...?

புத்தரின் போதனை
பொய்த்ததால்
பூமியில் நீதிகள்
செத்ததால்
இத்தனை வேதனை
தமிழருக்கா
இதற்கொரு தீர்வுதான்
இல்லையா ...?
சித்திரை என்னம்மா!
சொல்கிறாய்
தீர்வொன்று ஈழத்தில்
கிடைக்குமா!
எத்தனை காலந்தான்
இப்படி வாழ்வது
இதற்கொரு தீர்வுதான்
இல்லையா......?

காரைஎம். பி. அருளானந்தன்

## புத்தாண்டில் ...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனைகள், குறுகிய மனப்பான்மை, இடர்கள், தளர்ச்சிகள் போகட்டும் புத்தாண்டோடு பூரித்த உள்ளம், புதியபோக்கு, புனர்வாழ்வு, புத்தூக்கம் பிறப்பதாக அகமும் புறமும் மலர நாம் முந்தையோர் கண்ட முறையில் வழிபாடு, தானதர்மம், நற்செய்கைகள் செய்வோமாக. எக்குறையையும் மனத்தில் கொள்ளாமல் துள்ளி விளையாடுவோமாக.

### கவலைபோக்கும் விளையாட்டுகள்

முற்காலத்தவர் புத்தாண்டில் விளையாடிய வண்ணம் இன்று தென்கிழக்காசியாவில் நிலவுகின்றன ஊஞ்சல் ஆட்டம், தேங்காய் அடித்தல் முதலிய குதூகல விளையாட்டுகள் கவலையைப் போக்குவன. நல்லார் இணக்கமும் பெரியவர்கள் ஆசீர்வாதமும் நமக்குத் தேவை. இயற்கை அன்னை வேப்பமரத்தைப் பூக்கச் செய்து சுகந்த காற்று எமக்குச் சுகம் செய்யத் தந்துள்ளாள் இறைவனை வழிபட்டு வாழ்வோமாக

சென்ற காலத்தில் பழுதிலாதிறத்தில் நாள்தோறும் தமக்கு நல்ல முறையில் செய்திகளைச் சொல்லி வந்த உதயன் இனிவரும் எதிர்காலத்திலும் சிறந்த முறையில் செய்திகள் சொல்லி எம்மை வழி நடத்துமாறு திருவருள் பாலிப்பதாக.

வாழ்க! வளர்க!!


இன்றைய அறிமுகம்! நாளைய நாகரீகம்!!

அன்பர்கள்,
ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்

**உளங்கனிந்த நல் வாழ்த்துக்களை**
தெரிவித்துக் கொள்கின்றனர்
**சோபனா ஆடை அகத்தினர்**

★ காலத்துக்கேற்ற வகையில் நவீன டிசைன்களில் ஆடைகளை தெரிவு செய்யவும்.
★ மங்கள வைபவங்களுக்கான பட்டுச்சேலை வகைகளை தெரிவு செய்யவும்,
★ இறக்குமதி செய்யப்பட்ட ஆடைத் துணிசுகளுக்கும்

நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்:

**சோபனா ஆடை அகம்**

16, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

அன்பு ஆதரவு சிறந்து விளங்க
அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும்

**புதுவருட நல் வாழ்த்துகள்**

ஆண்டுகள் பல சென்றாலும்
நாடும் ஏடும் போற்றும்
நறும் ''சுவை'' ஐஸ்கிறீம்
வகைகளுக்கு ''லிங்கம்''

**லிங்கம் கூல் பார்**

வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் இதயம் பொங்கும்
**புத்தாண்டு நல் வாழ்த்துகள்**

வளரும் குழந்தைகள் முதல்
தாய்மையடையும் தாய்மார் வரை
சிறந்த போஷாக்குணவு

யாழ் மருத்துவ சங்கத்தால்
அங்கீகரிக்கப்பட்ட நிறையுணவு

ஜீவாகாரம்
(போஷாக்குணவு)

**அண்ணா கோப்பி**

யாழ்ப்பாணம், சுன்னாகம், இணுவில்,
திருநெல்வேலி கிளைகளில் கிடைக்கும்.




## வண்ணை கலட்டி கற்பக விநாயகர் ஆலய

# ★ வருடாந்த இரதோற்சவம் ★

# தும்பிக்கை நம்பிக்கை


"தும்பிக்கையான் பாதம் தப்பாமல் சார்வார் தமக்கு" ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்திருக்கும் வண்ணை மாநகரின் கண்ணே வீற்றிருக்கும் கலட்டி கற்பக விநாயக ஆலய வருடாந்த மகோற்சவம் வெகு சிறப்பாக நடைபெறுவது, வேழமுகத்து விநாயகனின் திருவருளால் என்றால் அதில் வியப்பில்லை.

இன்று நடைபெறும் தேர்த் திருவிழா தமிழ் புத்தாண்டில் நிகழ்வதால் மிகச் சிறப்பு வாய்ந்ததாக அமைகிறது. அண்மைக் காலத்திலிருந்து இவ்வாலயத்தில் ஆண்டு தோறும் மகோற்சவம் நடைபெற ஆவன செய்தவர்கள் அப்போதிருந்த அறங்காவலர் சபையினர் தான் என்பது அடியார்களுக்குத் தெரியும்.

இன்று பவனி வரும் அழகிய திருத்தேர் அயராத உழைப்பாலும், விடாமுயற்சியினாலும் அசையாத நம்பிக்கையினாலும் உருவானது என்றால் மிகையாகாது.

ஸ்ரீமுக புத்தாண்டில் பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

''விநாயகா சரணம்''
அறங்காவலர் சபை



உ
சிவமயம்

கலட்டியுறை கற்பகக் களிற்றை நினைந்தொருகால்
விருப்புடன் தொழு தெழுது வேண்டுவரம் கேட்டால்
உருப்படுமெம் உள்ளம்; உண்மையு யர்வுண்டாம்
பொடிப் பொடியாம் வினைகள்; பெறுவதுயர்வேயாம்.

திருத்தேரிற் பவனி வரும் கற்பகக் களிற்றை
விருப்போடு தொழுதேத்தி வேண்டும் வரங்கேட்டால்
பறந்தோடு மிடர்கள்; பாவவினையகலும்
பெருக்கோடும் பக்தி; பரகதியு முண்டாம்.

''அருள்மொழிச் செல்வர்'',
''வாகீச கலாநிதி'',
கனகசபாபதி நாகேஸ்வரன், எம். ஏ.

## விநாயகர் தேர்ப்பவனி

ஸ்ரீகற்பக விநாயகப் பெருமான்1993 ஸ்ரீமுக புதுவருடப் பிறப்பான இன்று காலை தேரில் பவனி வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார்.

விநாயகப் பெருமான் தேரில் பவனி வரும் வேளையில் பெருமானின் கிருபகடாட்சம் பெற்றுய்யும் வண்ணம் ஆலய பரிபாலனசபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ உதயன் ஸ்ரீமுக புத்தாண்டுச் சிறப்பிதழ் ★

திருமுகங் காட்டிச் சீர்பெருக்கிட
ஸ்ரீ முக வருடம் வருக வருகவே.



மரங்களை நடுவோம்,
மழையினைப் பெறுவோம்.
மில்க்வைற் சலவைத்தூள் வெற்றுப்
பக்கற் பத்துத் தந்து
மரக்கன்று ஒன்று பெறுக
மில்க்வைற் உற்பத்திகளுக்கு வழங்கி வரும்
ஆதரவுக்கு நன்றி.

## ★ மில்க்வைற் ★

---

இன்றைய அறிமுகம் நாளைய நாகரீகம்

- அன்பர்கள்
- ஆதரவாளர்கள்
- வாடிக்கையாளர்கள்

அனைவருக்கும் உளங்கனிந்த
**புத்தாண்டு வாழ்த்துக்களை**
தெரிவித்துக் கொள்கின்றனர்

## ராகமாலிகா ஆடை அகம்
## ராகம் ஆடை அகம்

3, 4, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

---

இன்றைய அறிமுகம்! நாளைய நாகரீகம்!
அன்பர்கள். ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றனர்

## ராசி சில்க்ஸ்

70, நவீன சந்தை [உட்புறம்],
யாழ்ப்பாணம்.
சுப முகூர்த்த பட்டுப் புடைவைகளுக்கு பெயர் பெற்ற
ஸ்தாபனம்

---

வாடிக்கையாளர் அனைவருக்கும்
எமது இனிய
**புத்தாண்டு வாழ்த்துக்கள்**
வி. வடிவேல்
பிராந்திய விற்பனையாளர்

## ★ லங்கெம் ★

219, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

---

## புத்தாண்டு நிகழ்ச்சிகள்

வதிரி பொமர்ஸ் கழகத்தில் புத்தாண்டு விளையாட்டுப் போட்டி இன்று கழக மைதானத்தில் நடைபெறும்.
(க-155)

o o o

வல்வை சனசமூக நிலையத்தின் பொன்விழா ஆண்டை ஒட்டி இன்று புத்தாண்டு தினம் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை போர்த்தேங்காய் அடிக்கும் போட்டியும், கயிறிழுத்தல் போட்டியும் நடைபெறும்
(க 1 5)

o o o

இலங்கை வங்கி மானிப்பாய்க் கிளையின் மருதடி விநாயகர் ஆலயத்தில் அமைந்துள்ள விசேட கருமபீடத்தை இன்று காலை 9 மணிக்கு பிராந்திய முகாமையாளர் திரு. க. கணேசமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.
(க)

o o o

நல்லூர் பிரதேச செயலக புத்தாண்டு தினவிழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் பிரதேசச் செயலாளர் திரு ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் நடைபெறும். இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும், திருமதி. மாணிக்கவாசகரும், சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் அ. சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ், யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு வே பொ. பாலசிங்கம். திருமதி பாலசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெறும். பாடசாலை மாணவர்களும் கலந்து கொள்ளுவார்கள். (க-111)

---

வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
**எமது புதுவருட வாழ்த்துக்கள்**
சகல விதமான மணிக்கூடுகள் உத்தர வாதத்துடன் திருத்துவதற்கும், உதிரிப் பாகங்கள், பட்டரிகள், மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் போன்றவற்றை சகாய விலையில் பெற்றுக் கொள்ள

## ரதி வோச் வேக்ஸ்
## அண்ட் ஸ்ரோர்ஸ்

62, 64, கஸ்தூரியார் வீதி,
(கடிகாரங்கள் திருத்துவதில் 50 வருடகால அனுபவம் பெற்றவர்கள்)

---

மண்ணிலே மாந்தரின்
மனக் கசப் பொழிந்திட
எண்ணிய கருமங்கள்
ஏற்றம் பெற்றிட
தண்ணொளி வீசித்
தரணி ஓங்கிட
வண்ணப் புதுவருட
வாழ்த்துக்கள் வளர்கவே

## ரவி அன் ராஜ் சில்க்ஸ்,

77, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

---

## ★ லாவண்யா ★

**பல், மூக்குக் கண்ணாடி அகம்**
உரிமையாளர்:- டாக்டர் றெஜிசொலமன்
175, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையம் முன்பாக)

வி. ரீ. அன் சன்ஸ்,
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.
(இலங்கை வங்கி அருகில்)

302, மணிக்கூட்டு வீதி,
எழிலகம் முன்பாக,
யாழ்ப்பாணம்.

எமது
**புத்தாண்டு வாழ்த்துக்களை**
வாடிக்கையாளர்கள், அன்பர்களுக்குத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
(சி-2002)

---

இன்றே **கிருபா நகை மாளிகை** நாடுங்கள்

"வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து"



நம்பிக்கை, நாணயம்
நாலும் மலர்ந்திட
அம்புவி மீதில்
அணிந்திடு தங்கம்
தம்பி கிருபா
தக தக வெனத்தர
நம்பி நாடுவீர்
நாளும் ஜொலித்திட

ஓராண்டு தந்த
ஒளிர் விடு நகைகள்
ஈராண்டு தொடர
இதயத்தைக் கவர்ந்திடும்
நேராய் நாடு மின்
நும் கிருபா நகை
சீராம் தங்கச்
செழிப்புறு மாளிகை

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு

## ★ இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள் ★

# கிருபா நகை மாளிகை

333, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: வழமையாக இயங்கி வந்த எமது ஸ்தாபனம் நேர் எதிரே மாற்றியுள்ளதை அறியத்தருகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ உதயன் ஸ்ரீமுக புத்தாண்டுச் சிறப்பிதழ் ★


## புத்தாண்டு வாழ்த்துக்கள்

புதிதாய் பிறந்திடும்
புத்தாண்டுதனில்
யாவும் சிறந்திட
தன்மைகள் பெருகிட
சிந்தை மகிழ்ந்துமே
சிறப்பாய்த் திகழ்ந்திட

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும்
எமது உளம் கனிந்த
புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

**கலக்சி**
**புகைப்பட சேவை**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



## எவர் விஷன்

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்
மற்றும் ஏனையோர்களுக்கும் எமது உள்ளம் கனிந்த
**புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

உங்கள் மங்கள நிகழ்வுகளை பலவருட
அனுபவமுள்ளவர்களால் தத்து ரூபமாக
குறைந்த செலவில்

★ வீடியோவில் எடுப்பதற்கும்
★ புகைப் படங்கள் எடுப்பதற்கும்
★ நீங்கள் எடுத்த வீடியோ படங்களை சிறந்த முறையில் Mixing செய்வதற்கும்.
★ வீடியோ கமராக்களையும் T. V. Deck போன்றவற்றை உத்தரவாதத்துடன் உடனுக்குடன் திருத்திக் கொள்வதற்கும்.

**எவர் விஷன்**
21, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.



## புத்தாண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்

இடம்: வேதபாராயண சனசமூக நிலையம்,
காங்கேசன்துறை வீதி. கோண்டாவில்.

காலம்: 14 - 04 - 1993 புதன்கிழமை

நிகழ்ச்சி

சிறுவர் நிகழ்ச்சிகள்:
1) [விக்னேஸ்வரா சிறுவர்பாடசாலை, கோண்டாவில்]
2) [யாழ். கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்]

புல்லாங்குழல் கச்சேரி: V. K. பஞ்சமூர்த்தி,
கோண்டாவில் மேற்கு.

நாடகம்: யாழ் நாடக அரங்கக் கல்லூரி

புத்தாண்டு வாழ்த்தோடு
கோல்டன் டக் — GOLDEN DUKK
படப்பிடிப்பாளர்கள்,
பருத்தித்துறை வீதி,
இருபாலை, கோப்பாய். (5884)



திறுவன ஆசிரியர்கள், மாணவ மணிகள்
மற்றும் நலன் விரும்பிகளுக்கு......

## நியூட்டன் அக்கடமி

இருபாலை றோட், கோண்டாவில்.

தனது புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

**O/L DAY CLASS**

★ கட்டுப்பாடு
★ தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு
★ மாதாந்த பரீட்சைகள்

ஆகியவற்றுடன் மற்றுமொரு புதிய பிரிவு ஆரம்பம்:

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு!
கணிதம் — S. கருணாகரன்
விஞ்ஞானம் — இரா. அருட்செல்வம்
தமிழ் / சமயம் — ஞான திருக்கேதீஸ்வரன்
சமூகக்கல்வி — கணேஸ்
ஆங்கிலம் — சத்தியமூர்த்தி
வர்த்தகம் — ஸ்ரீ

● கிழமையில் எட்டு(8)கணித வகுப்புகள் நடைபெறுகின்றன. உங்கள் இடங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்) (84/52)


### மருதடி...
( 2 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தேர் இவைகள் எல்லாம் சம்காரத்தைக் குறிப்பதாகும். குமார தந்திரம் என்ற நூலில் இந்த சித்திரத்தேர் எட்டு விதமாகக் கூறப்படுகின்றது. மூன்று சில்லுகளைக் கொண்டது "விஜயன்" என்றும், நான்கு சில்லுகளைக் கொண்டது. "காந்தல்" என்றும், ஐந்து சில்லுகளைக் கொண்டது "ஸ்ரீகேசன்" என்றும், ஆறு சில்லுகளைக் கொண்டது "விசாலகன்" என்றும், ஏழு சில்லுகளைக் கொண்டது "நிபத்திரன்" என்றும், எட்டு சில்லுகளைக் கொண்டது "ஸ்ரீவிசாலன்" என்றும், ஒன்பது சில்லுகளைக் கொண்டது "பத்திரன்" என்றும். பத்து சில்லுகளைக் கொண்டது "பத்திரவிசாலன்" என்றும் எட்டு விதமாகக் கூறப்பட்டுள்ளது.

சிற்பக் கலைகளில் அடித்தளத்திலிருந்து மேல் நோக்கி வரிசையாக புதஸ்தானம், சித்தூர்மட்டம், பேரூர் மட்டம், நாராசனம், தேவாசனம், சிம்மாசனம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றிலே சிம்மாசனத்திலேயே இறைவன் அமர்த்தப்படுகிறான். ஆகவே எவ்வகைத் தேரானாலும் சம்காரத்தையே குறிக்கின்றது, தீர்த்தம் அனுக்கிரகத்தைக் குறிப்பதாகும்

வரும் ஸ்ரீமுக வருஷம் மக்கள் இன்னல்கள் எல்லாம் நீங்கி சாந்த நிலை நாட்டில் ஏற்பட்டு மக்கள் சுபீட்சமாகவும், மகிழ்ச்சியோடும் வாழ வேண்டுமென்று மருதடி விநாயகரை தேரில் தரிசித்து எல்லோரும் இன்பமாக வாழ பிரார்த்திப்போமாக.

★

### காலத்துக்கு....
(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மாகும்."

கொடுப்பவன் காலமறிந்து. இடமறிந்து கொடுக்கும் போது, பெறுபவர் உண்மையிலேயே பயன் பெறுபவராவர். இந்த உண்மை இக்காலத்தில் உணரப்படவேண்டியதொன்றாகும்.

இப்புத்தாண்டு நாளிலே இச்சிந்தனையை மனங்கொள்வோமாக


## கம்பியூட்டர் கல்வி

BASIC LANGUAGE
4 MONTHS

சனி, ஞாயிறு
வகுப்புகள்

ஆரம்பம்:
17 – 04 –1993
10 - 30 மணி

கூடிய செய்முறைப் பயிற்சி, இலவச அச்சடித்த பாடக் குறிப்பு, பயிற்சிமுடிவில் சான்றிதழ்.

கட்டணம்:
மாதம் 400 மட்டுமே.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(Pioneers in Computer Education)
16, 3rd, CROSS ST,
JAFFNA.
(சி-4840)



## NEW MASTER INSTITUTE

B.M.C. Lane, - Jaffna.

**A/L 95**

WEEK END CLASSES

PHYSICS

புதிய பிரிவு ஆரம்பம்:
18-04-93
(ஞாயிறு)
காலை 9 – 00 மணி
(சி-4842)



வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்,
நண்பர்கள் அனைவருக்கும்
**இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை**
தெரிவிக்கிறது

## கயல்விழி நகைப் பூங்கா

(KAYALVILI NAKAI POONGA)
(தங்கப்பவுண் நகை வியாபாரம்)

நவீன தங்க, வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்:
✶ ஆடர் நகைகள் 22 கரட் தங்கத்தில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

224/B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



எம்மவர் வாழ்வில் மகிழ்ச்சி பொங்க
பிறக்க வேண்டும் ஸ்ரீமுக வருஷம்
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது

**புத்தாண்டு வாழ்த்துக்கள்**

★ உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள வைபவங்களை சிறந்த முறையில் (மிக்ஸிங்) வீடியோ படம் பிடித்திடவும்.
★ நெஞ்சில் நிலைக்கும் பழைய புதிய சினிமா பாடல்களை சிறந்த முறையில் ஓடியோ ஒளிப்பதிவு செய்திடவும்.
★ வீடியோ படக் கசட்டுக்களை வாடகைக்குப் பெற்றிடவும்.

## சுப்பஸோ

**வீடியோ ஓடியோ சென்ரர்**
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய
**புத்தாண்டு வாழ்த்துக்கள்**




## யோகா போட்டோ & வீடியோ

✶ வீடியோ படப்பிடிப்பாளர்
✶ வெளிப்புற படப்பிடிப்பாளர்

தெல்லிப்பழையில் இயங்கி வந்த மேற்படி நிறுவனம் தற்போது சுன்னாகத்தில் (உதயன் பணிமனை அருகில்) இயங்கி வருகிறது என்பதனை நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம். (5881)



3 ஆம் பிரிவு **A/L 95**

## கலை, வர்த்தகக் கல்லூரி
## C. C. A.

வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம்.

பொருளியல் — திரு. உதயன்
கணக்கியல் — திரு. ஸ்ரீ
வர்த்தகம் — திரு இரட்ணம்
அளவையியல் — திரு சயந்தன்
இந்துநாகரிகம் — திரு ஜோதீஸ்வரன்
தமிழ் — திரு. தங்கராசா
புவியியல் — திரு. வேலாயுதபிள்ளை
அரசியல் — திரு. பஞ்சாட்சரம்
கிறிஸ்தவ நாகரிகம் — திரு செபஸ்ரீன்

**ஆரம்பம்:- 17 - 04 - 1993**
காலை 8-00மணி.

குறிப்பு: பிரிவு I, II அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
— நிர்வாகி.

[சி-4917]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஹைறைலன் பிறவுண் பேட்டு குஞ்சுகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (6116)

### தேவை

ஜாம்போத்தல்கள், பன்ரா, கொக்கோகோலா, வகையிலான 300 மில்லி லீற்றர், 160 மில்லி லீற்றர் போத்தல்கள் என்பன எம்மால் நியாய விலையில் கொள்வனவு செய்யப்படும். சுரபி பழரசத் தொழிற்சாலை, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (சி-4894)

### மணமகன் தேவை

முல்லைத்தீவை வசிப்பிடமாகக் கொண்ட இந்துமத சித்திரை நட்சத்திரம், செவ்வாய் தோஷமற்ற உத்தியோகம் புரியும் 38 வயது மணமகளுக்கு மணமகன் தேவை. சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும் இல. 519, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (25233)

### மிருதங்கம்

மிருதங்க பரீட்சை எடுக்கும் மாணவர்களின் மிருதங்க திருத்த வேலைகள் மிக விரைவில் நல்ல முறையில் மலிவாக செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமான் கோவிலடி, யாழ்ப்பாணம். (25183)

### பெற்றுக் கொள்ளவும்

1992 — திருத்துவதற்கு கொடுத்த மணிக்கூடுகளை தாமதமின்றி மீள ரசீதுடன் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். ரதி வாச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ், இல. 62, 64 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி 4841)

### ஜோதிடம்

மகாதேவா ஜோதிடம் புதிய ஸ்ரீமுக வருஷம், இராசிப் பலன் இதழ் எங்கும் விற்பனையாகின்றது. சோதிடர 140, செல்லர்வீதி, கல்வியங்காடு. நல்லூரில் சந்திக்கலாம். (25235)

### தவறிவிட்டது

03-04-93 அன்று மந்திகைக்கும்—நெல்லியடிக்கும் இடையில் கந்தசாமி செல்வதி, குரும்பைகட்டி, புலோலி தெற்கு என்பவருடைய 738140230 V என்ற இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மந்திகையிலுள்ள கிருஷ்ணா பத்திரிகை விற்பனையாளரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். தகவல்: க. அருளம்பலம். (25853)

## சாரணர் பாசறை

தென்மராட்சி, ஏப். 14

பளை மகா வித்தியாலயத்தில் சாரணர் குழு ஆரம்பிக்கப்பட்ட 13 ஆம் வருட நிறைவையொட்டி நாளை வியாழன் முதல் சனிக்கிழமை வரை 3 நாட்களுக்கு பாடசாலையில் சாரணர் பாசறை நடைபெறும். (ஓ-117)

---

## ஒன்பதாவது ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

### அருமைத்துரை சுதீஸ்குமார்

அன்னை மடியில்: **12-03-1967**

ஆண்டவன் அடியில்: **13-04-1984**

ஒன்பது ஆண்டுகள் ஓடினவே சுதீஸ்குமாரா
அன்பது கொண்ட அருளாலா—இன்னமுதே
இன்னமும் நாம் வாழ் கின்றோ மிப்பாரில்
கன்னலே யுன்நினைவைச் சுமந்து
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்:

உன்பிரிவால் துயருறும்:

ஐயா, அம்மம்மா, டடா, மம்மி, சதீஸ்தம்பி, சபேஸ்தம்பி, அத்தான், அக்கா, மருமகன்மார், மருமகள், உற்றார், உறவினர்கள்.

சுதுமலை மத்தி,
மானிப்பாய். (25231)

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை

### லெப். அல்பேட் (ராஜ்குமார்)

தாயின்மடியில்: **09 — 10 — 1970**

வீரமரணம்: **14 — 04 — 1989**

ஆலடிச் சந்தியில் குண்டுபட்டு வீரமரணம் அடைந்து நான்கு ஆண்டுகள் முடிந்தும் உம் நினைவு எங்களை விட்டு அகலாது.
உம் ஆத்மா சாந்தியடையட்டும்

தாய் அக்கா, அண்ணன்மார்.
மச்சான், மைத்துனிமார். உறவினர்கள்.
மருமக்கள், பெறாமகன்.

மலர்மகள் வீதி,
அரியாலை. (25252)

---

# இரட்டைச் சூட்டடுப்பு கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஏப் 14

விறகைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் நோக்கத்துடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டு வரும் இரட்டைச் சூட்டடுப்பின் பாவனை முறை மற்றும் பயன்பாடு பற்றியும் பரவலாக கருத்தரங்குகள் வைத்து விளக்கவுரைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

பாடசாலைகள், சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள், தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய உற்பத்திக் குழு கருத்தரங்குகள், பொது நிறுவனங்களின் மகளிர் அமைப்புப் பணிமனைகள் போன்றவற்றில் விளக்கவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இது வரையும் பாடசாலைகள் தோறும் நடத்தப்பட்ட கருத்தரங்குகளில் 29030 மாணவர்களும், 1417 ஆசிரியர்களும், சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 331 பேரும், தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 167 பேரும், கிராமிய உற்பத்திக் குழுக்களைச் சேர்ந்த 215 பேரும், மகளிர் அமைப்பினைச் சேர்ந்த 53 பேரும் கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளனர்.

கருத்தரங்குகளை நடத்தியதன் விளைவாக இரட்டைச் சூட்டடுப்பின் பாவனை அதிகரித்துள்ளதாகவும்- இதனால் மட்கல உற்பத்தியாளர்களை கூடுதலாக இணைத்து உற்பத்தியினை பெருக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளதாகவும்- கூடுதலான கட்டடத் தொழிலாளர்களை இணைத்து தொழில் வாய்ப்பு வழங்கக்கூடிய நிலை உருவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த)

---

## 31ஆவது நாள் நினைவஞ்சலி

## நன்றி நவிலல்



மலர்வு: 6 - 07 - 1923

மறைவு: 15 - 03 - 1993

### திருமதி கனகசபை தங்கமுத்து

(நுணாவில் கிழக்கு சாவகச்சேரி)

அன்புள்ளம் கொண்டு அத்திவாரம் வித்திட்டு
எம்மை அரவணைத்து எமக்கெனவே வாழ்ந்து
ஏற்றமிகு வாழ்வுதந்து எம்மை மீளாத்துயரில்
ஆழ்த்திவிட்ட எங்கள் அன்புத் தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம்
கண்ணீர் மல்கி பிரார்த்திக்கின்றோம்.

16-3-93 அன்று நடந்த ஈமக்கிரியைகளில் நேரிலும் அனுதாபச் செய்தியை அனுப்பியும் இன்னும் பல வழிகளில் உதவி புரிந்தோர்க்கும் எல்லோருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். 15-4-93 வியாழன் எங்கள் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

114/1, கல்லடி ஒழுங்கை,
சாவகச்சேரி. (25246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் ★

* புதிய பழைய திரைப்பட கொப்பிகளை வாடகைக்கு பெற்றுக்கொள்ளவும்,
* T. V, டெக், ஜெனரேற்றர் போன்றவற்றை வாடகைக்கு பெற்றுக்கொள்ளவும்
* புத்தம் புதிய திரைப்படங்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளவும்

இன்றே நாடுங்கள்

# வீடியோ ஜீவிதா

இல. 526, ஒட்டுமடம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-4848)



# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

## எமது நிறுவனத்தின்

பிரதம ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள்
மாணவர்கள், பழைய மாணவர்கள்
அனைவருக்கும்

## புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

உரித்தாகுக!

குறிப்பு:- புதுவருடத்தை முன்விட்டு எமது நிறுவனத்தில் புதன், வியாழன் நடைபெறவிருந்த சகல வகுப்புக்களும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன எதிர்வரும் வெள்ளி முதல் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி வகுப்புக்கள் யாவும் நடைபெறும்.

—நிர்வாகி

(C/4844)


## 4ஆம் ஆண்டு நீங்காத நினைவு



**அமரர் S. T. சந்திரகுமார்**
(கிராம சேவையாளர், காரம்பன் மேற்கு)

பிறப்பு: 04-01-1954
அந்நியர் அழிப்பு: 14-04-1989

தம்பி! நீர் இவ்வுலகை விட்டு நிம்மதியாகப் போய் விட்டீர். நான் நிம்மதியில்லாமல் சீவிக்கின்றேன். உம்மோடு என்னையும் சேர்த்துக் கொள்ளும்

ஒவ்வொரு நிமிடமும் அழுதுகொண்டிருக்கும்;
அம்மா — செ. பாக்கியம்.
அக்கா — செ. சகுந்தலாதேவி

40/5, ரெம்பிள்றோட் லேன்,
யாழ்ப்பாணம்.

(25227)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப் 14

சுன்னாகம் ஸ்கந்தர ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஸ்கந்தா மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4.30 மணிக்கு ஊரெழு றோயல் அணியை எதிர்த்து புத்தூர் வீனஸ் அணி மோதும். (உ)

o o o

நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நாவாந்துறை கலைவாணி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3மணி:- திருநகர் பாரதி வி.க. அணி எதிர் குருநகர் தொடர்மாடி சென். ஜூட்ஸ் வி க. அணி

★ 4 மணி:- பாஷையூர் சென். அன்ரனிஸ் வி க. அணி எதிர் நாவாந்துறை சென். நிக்கிலஸ் வி க. அணி.

(உ)

## செஞ்சிலுவை துக்கம் அனுஷ்டிக்கும்

யாழ்ப்பாணம், ஏப் 14

கடந்த சனிக்கிழமை அச்சுவேலியில் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் உப தலைவர் கந்தையா புவனேந்திரனுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை மற்றும் பிரிவுகள் ஒரு மாத காலத்துக்கு துக்கம் அனுஷ்டிக்க உள்ளன.

ஒரு மாத காலத்துக்கு கொண்டாட்டங்களை ஒத்தி வைக்குமாறும்—

நிர்வாகக் கடமைகள், தொண்டர் சேவைகள், அனர்த்தங்கள் தொடர்பான சேவைகள் போன்ற அவசிய சேவைகளை மாத்திரம் மேற்கொள்ளும் படியும் கோரப்பட்டுள்ளது (இ)

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு

யாழ்ப்பாணம், ஏப் 13

வைத்திய சிகிச்சைக்காக கப்பலில் கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களும் அவர்களுடன் கூடச் செல்பவர்களும் தங்களுக்கு இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு மற்றும் தண்ணீருடன் யாழ் ஆஸ்பத்திரியில் நாளை மறுதினம் காலை 7 மணிக்கு தவறாது சமூகம் தருமாறு யாழ். ஆஸ்பத்திரி பணிப்பாளர் கேட்டுள்ளார்

(உ)

## மட்டக்களப்பில் பஸ் விபத்தில் ஐவர் பலி

கொழும்பு, ஏப் 14

மட்டக்களப்பில் இருந்து வாழைச்சேனை நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் மினி பஸ் ஒன்று தன்னாமுனையில் குடை சாய்ந்ததில் ஒரு பெண் உட்பட ஐந்து பேர் உயிரிழந்தனர்.

மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது படுகாயமடைந்த நிலையில் 25 பேர் மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-எ)

## ஆசிரியர்கள் பற்றாக்குறை

மந்திகை, ஏப் 14

உடுத்துறை மகாவித்தியாலயத்தில் ஜி. சி. ஈ. உயர்தர வகுப்பில் பௌதியல், ரோமன், கத்தோலிக்கம் போன்ற பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இங்கு கல்வி பயிலும் ஜி. சி. ஈ. உயர்தர வகுப்பு மாணவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இவ்வருட ஆரம்பத்தில் இப்பாடசாலையில் இருந்து 4 ஆசி

(9ஆம் பக்கம் பார்க்க)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை பூவிலிங்கம்

யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தம்பதியின் மகன் பூவிலிங்கம் (பாரதி பதிப்பகம் A. B Printers யாழ்ப்பாணம்) அவர்கள் 13-04-93 அன்று காலமானார்.

இவர் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், இலிங்கேஸ்வரி (சுவிஸ்), இலிங்கேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவானந் (சுவிஸ்), சிவராஜமலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்துஜா, அநுஜன், நிரோஜன், அநுஸ்லா ஆகியோரின அன்புப் பேரனுமாவர் அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-04-93 செவ்வாய்க்கிழமை பிற்பகல் செம்மணி மயானத்தில் நடைபெற்றன.

தகவல்
திருமதி. இ. பூவிலிங்கம்
100, இராமநாதன் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

(சி/4845)

## நவராஜசிங்கம் குலானந்தன்

(பொறியியலாளர்)

நவராஜசிங்கம் குலானந்தன் (முன்னாள் காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன அத்தியட்சகர்) 10-04-93 இல் கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நவராஜசிங்கம் (முன்னாள் நாடாளுமன்ற பத்திராதிபர்), திருமதி பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும், மனோராணியின் அன்புக் கணவரும், றோய்சங்கரின் அருமைத் தந்தையும், Dr. சிறீவல்லிபுரம், கமலானந்தன் (ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்), விமலானந்தன் (இங்கிலாந்து) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 10-04 93 இல் கனடாவில் இடம் பெற்றன

தகவல்:
ந. கமலானந்தன்
மானிப்பாய்.

25238)

## தில்லையம்பலம் குமாரவேலு

(ஐயாத்துரை)

மண்டைதீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தில்லையம்பலம் குமாரவேலு (ஐயாத்துரை) 09-04-93 அன்று கரியாலை நாகபடுவானில் காலமானார் அன்னார் தில்லையம்பலம் - கண்ணாத்தை தம்பதிகளின் அன்பு மகனும், சுந்தராம்பிகையின் அன்புக் கணவரும், ஜதீசா, ஸ்ரீஜெயதா, ஸ்ரீசுயதா, செல்வக்குமார், சுதாகினி, நந்தகுமார், வசந்தகுமார், சுந்தரேசன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், செல்லாச்சி, காலஞ்சென்ற சொக்கநாதன், பவளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11 04-93 நாகபடுவானில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. நந்தகுமார் (மகன்)

(2525)

## திருமதி முத்தையா முத்துப்பிள்ளை

கீரிமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது சுன்னாகத்தில் வசித்தவருமான காலஞ்சென்ற முத்தையாவின் அன்பு மனைவியுமான திருமதி முத்துப்பிள்ளை 13-04-93 இல் சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கதிராசிப்பிள்ளை, செல்வி சிதம்பரலட்சுமி முத்தையா (ஆசிரிய ஆலோசகர் I S A பண்டத்தரிப்புக் கோட்டம்), திருமதி இளையதங்கம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர் க. வேலுப்பிள்ளை (அடவு கடை, காங்கேசன்துறை), திரு. க. சின்னராசா (பெருந்தெருக்கள் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் அருமை மாமியாருமாவர்.

அன்னார் திருமதி தவமலர் சிவராஜா, திரு. செ. சிவராஜா (டுபாய்), திரு திருமதி வே. சிவபாலன் (நோர்வே), திரு திருமதி வே. சிவநேசன் (டென்மார்க்), திரு. வே. சிவசண்முகன் (கொழும்பு), திரு. வே. சிவயோகன் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்; சிவந்தன், சிவகீர்த்தன், சிவதர்ஷன், வருண், அர்ஜுன், வேணுஜன் ஆகியோரின் அருமைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14-04 93 காலை 10 மணியளவில் சுன்னாகத்தில் நடைபெற்று, கொத்தியாலடி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்வி சி. முத்தையா
''ஸ்கந்தா பில்டிங்''
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

(5889)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## புத்தாண்டுச் சிந்தனை

புத்தாண்டு பிறந்து விட்டது. அதனைப் புதிய உணர்வோடும், நம்பிக்கையோடும் வரவேற்போமாக.

இயற்கையின் காலச் சுழற்சிக்கு மனிதர்கள் காலவட்டங்களை வகுத்தனர். அந்தக் காலவட்டத்தின் அலகுகளே வருடங்கள். மனித மனம் மாற்றம் எதுவுமின்றி, ஏற்றத் தாழ்வான உணர்வுகள், உணர்ச்சிகள் இன்றி ஒரே நிலையில் செயற்பட்டால் வாழ்க்கை வெறும் இயந்திரப் பாணியில் அமைந்துவிடும். ஆகையால் துன்பத்தைத் துறந்து இன்பமும், அவநம்பிக்கையை நீக்கி நம்பிக்கையையும், சலனத்தைப் போக்கித் தெளிவும், கவலையை அகற்றி மகிழ்ச்சியும் கொள்வதற்குத் தூண்டுதலாகவும், துணையாகவும் பண்டிகைகள் உருவாக்கப்பட்டன.

பருவகாலத்தின் மாற்றத்துடன் மக்கள் மனம் களிகொள்ளவும், நம்பிக்கையோடும் புத்துணர்ச்சியோடும் புதிய தெம்புடனும் பின் தொடரும் நாட்களை எதிர்கொள்ளவும் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் உதவுகின்றன. இன்று நாட்டுக்கு நாடு வெவ்வேறு காலங்களிலும், வித்தியாசமான பண்பாடுகளைத் தழுவிய நடைமுறைகளிலும், வழக்கியல்புகளிலும் புத்தாண்டுகள் கொண்டாடப்படுகின்றன.

எனினும் புத்தாண்டுக் கொண்டாட்டங்களின் உட்சோட்பாடும், நோக்கமும் ஒன்றே. கடந்த காலத்தின் வாழக்கைத் துயர்கள் துன்பங்கள் கழிந்து, பிறக்கும் புத்தாண்டு நற்பயன்களை நல்க வேண்டும் என்ற மனமாண்மியத்துடனேயே உலகின் சகல பகுதி மக்களும் புது வருடத்தை வரவேற்கிறார்கள்.

இந்த வகையில் கடந்த பல ஆண்டுகளாகக் கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்து, இன்று, வாழ்க்கையில் இனிமேல் இவற்றைவிட நெருக்கடிகளும் இன்னல்களும் இழப்புகளும் வருமோ என்று எண்ணுமளவுக்கு, வாழ்வா சாவா என்று ஊசலாடிக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர்களுக்கு புத்தாண்டு வாழ்வு தருமா என்பதே அவர்கள் மனங்களில் மேலோங்கி, நிறைந்திருக்கும் ஏக்கமும் ஆதங்கமுமாகும்.

விடுதலையா அடிமை வாழ்வா என்ற வாழ்க்கைப் போராட்டத்தில் அவர்கள் சிக்குண்டுள்ளனர். விடுதலையுடனும் சுதந்திரத்துடனும் வாழ வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்துக்குத் தம்மை ஆற்றுப்படுத்தி அதனை அடைவதற்குப் போராடும் இனமாக ஈழத்தமிழர் இனம் செயற்படுகிறது.

ஆகையால் வாழ்க்கையில் வந்துள்ள இன்னல்கள் இடர்கள், இழப்புகள், நெருக்கடிகள், நெருக்குதல்களால் அவர்கள் மனச்சோர்வோ தளர்வோ அடையலாகாது. இனி வருவது நன்மையே என்ற நம்பிக்கை உணர்வோடு, புத்துணர்வுடன் அடிமை விலங்கை அறுத்து உடைக்கும் மன உத்வேகத்துடன், மன உறுதியுடன் உழைத்தலும் செயற்படுத்தலும் இன்றியமையாதன.

வாழ்க்கை வாழ்வதற்கே. அதற்கு இடையூறும் பாதிப்பும் ஏற்படும் வேளை அவற்றைப் போக்கப் போராடுவது அவசியம் அதுவே தர்மமும் ஆகும் ஆகவே தமிழர்கள் நடத்திவரும் விடுதலைப் போராட்டம் தர்மம் செறிந்தது எவர் எதனைச் சொன்னாலும், காலவட்டங்கள் கழிந்து போனாலும் வெல்வது தர்மமே! தர்மத்தின் வெற்றிக்காகத் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட தமிழர்களுக்கு ஒவ்வொரு நாளும் புத்தாண்டாக வேண்டும். நன்மையே. விளைக்கும் என்ற நம்பிக்கையோடு புதுத்தெம்புடன் உழைப்போமாக. அதுவே தமிழர் தம் புத்தாண்டின் புதிய சங்கல்பமுமாகுக!

## கடிதங்களை பெறலாம்

யாழ்ப்பாணம், ஏப். 14

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள — வடபகுதியைச் சேர்ந்தோர் — அவர்களின் உறவினர்களுக்கு எழுதிய கடிதங்கள் இங்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இக் கடிதங்களுக்கு உரியவர்கள் நாளை வியாழக்கிழமை யாழ். செயலகத்தில் அரச அதிபரின் அலுவலகத்தில் வைத்து அவற்றை பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதங்களை கொழும்பிலிருந்து யாழ். அரச அதிபர் தம்முடன் எடுத்து வந்துள்ளார். (உ-162)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 14

நாளை வியாழக்கிழமை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த பல நோ. கூ. சங்கத் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் கலந்துரையாடல் தவிர்க்கமுடியாத காரணங்களினால் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகிறது. (க)

## கண்காட்சி

உடுவில், ஏப் 14

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் உடுவில் கிளை எதிர்வரும் வெள்ளி, சனிக்கிழமைகளில் இராமநாதன் கல்லூரியில் கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளது.

விவசாயப் பொருள்கள், கைத்தொழில் உற்பத்திச் சாதனங்கள், ஓவியங்கள் போன்றவை காட்சிக்கு வைக்கப்படும். (ஓ-152)

## ஆலயங்களில்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும், வாராந்த நிகழ்வுகளில் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்கு ''சும்மா இரு'' எனும் தலைப்பில் கம்பவாரிதி திரு. இ. ஜெயராஜ் சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்துவார்.

o o o

தாவடி ஸ்ரீ அம்பலவான வேதவினாயகர் ஆலய அலங்கார உற்சவம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் நடைபெறும். (க)

o o o

புத்தாண்டு விசேட நிகழ்ச்சியாக உரும்பராய் அருள்மிகு ஞானவைரவர் கோவிலில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு திரு. வர்ண ராமேஸ்வரனின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும். (த-3)

o o o

வண்ணை கலட்டி கற்பக விநாயகர் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று காலை நடைபெறும் நாளை தீர்த்த திருவிழா இடம்பெறும் (க)

o o o

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத் தேர்த்திருழா இன்றாகும். நண்பகல் 12 மணிக்கு பஞ்சமுகவிநாயகப் பெருமான் தேரில் பவனி வருவார். நாளை காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவம் நடைபெறும். (ஓ)

## போட்டி ஆரம்பம்

யாழ். மாவட்ட பாடசாலைகளின் 17, 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் ஆரம்பமாகிறது. (உ)

### ஆசிரியர்கள்---

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றனர். மேலும் 4 ஆசிரியர்கள் பயிற்சிக்காக ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்துள்ளனர். இதனைத் தொடர்ந்தே பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

தற்போது இப்பாடசாலைக்கு 4 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்று வந்துள்ள போதும் கூட, ஆசிரியா பற்றாக்குறை தொடர்ந்து நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

ஏனைய வகுப்புகளில் அழகியல் பாடங்களைக் கற்பிக்கவும் ஆசிரியர்கள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

## சிறந்த நிறை உணவு முட்டை

முட்டை, வளரும் குஞ்சின் கருவிற்கு ஒரு முழுமையான உணவு மனிதனுக்கும் முக்கியமாக குழந்தைகளுக்கு இது ஒரு சிறந்த நிறை உணவாக அமையும்.

ஒரு சாதாரண (60 கிராம் எடையுள்ள) முட்டையில், 7 கிராம் புரதம், 6 கிராம் கொழுப்பு, 30 மி கி சுண்ணாம்பு, 1 5 மி. கி. இரும்புச் சத்து, 80 கிலோ கலோரி சக்தியும் உண்டு.

வெள்ளைக்கருவில் 13% புரதமும், மஞ்சள் கருவில் 16.6% புரதமும் உண்டு. இதைவிட உயிர்ச்சத்து A, D, B முதலியவையும் உண்டு.

மஞ்சள் கருவின் நிறம் அதிகரிக்க அதன் உயிர்ச்சத்தின் செறிவும் அதிகரிப்பது இல்லை. கோழியின் உணவில் கலந்திருக்கும் பச்சை இலையின் அளவைப் பொறுத்தே மஞ்சள் கருவின் நிறம் இருக்கும். லேர்க்கோழியின் முட்டைக்கும், கூட்டில் வளர்க்கும் கோழியின் முட்டைக்கும் இடையில் போசாக்கைப் பொறுத்த வரையில் வித்தியாசம் இல்லை. வெள்ளைக் கருவில் கிருமிகளை அழிக்கும் சக்தியுடைய புரதம் உண்டு.

ஒரு முட்டையில் 250 மி. கி கொலெஸ்டறோல் உண்டு. இது குருதிக் குழாய்களில் படிந்து, வேறு காரணிகளுடன் சேர்ந்து பிற்காலத்தில் மாரடைப்பு போன்ற குருதிக் குழாய் அடைப்புடன் சம்பந்தப்பட்ட நோய்களை உண்டாக்கலாம்; ஆகவே, இருதய நோய் வரும் சாத்தியம் கூடுதலாக உள்ள இளைஞரும் நடுத்தர வயதினரும் ஒரு வாரத்திற்கு 2-3 முட்டைக்கு மேல் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

## முருங்கனில் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஏப். 14

மன்னார் மாவட்டம் முருங்கனில் நேற்றுக் காலை 8 மணி அளவில் புக்கார விமானம் ஒன்று குண்டு வீச்சு நடத்தியது.

முருங்கனின் இரட்டைக் குளம், கற்கடந்தளம் ஆகிய பகுதிகளில் மக்கள் குடியிருப்புகளை நோக்கி குண்டுகள் வீசப்பட்டன. (த)

## பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஏப். 14

யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற பயிற்சி வகுப்புக்கள் நாளை வியாழக்கிழமை நடைபெறமாட்டா எனவும் அந்த வகுப்புகள் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (ஓ-க)

### தொண்டர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் முடிவடையும்

செஞ்சிலுவை சங்கத் தொண்டர்கள், ஊழியர்கள், சாரணர்கள், திரிசாரணர்கள், பெண் சாரணியர் வழிகாட்டிகள், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் முதலுதவிப் பிரிவினர், தாதியர், பிரிவினர் ஆகியோரையும் —

றோட்டறி, லயன்ஸ், இன்ரறக்ட், லியோ கழகங்கள், சமூக சேவை மற்றும் தொண்டர் அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும்- சீருடையுடன் இப்பேரணியில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. [உ-162]

### பல்கலை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய பல்கலைக் கழக கல்வி வாய்ப்பு பறிக்கப்பட்டிருப்பதாக ,''லங்கா தீப'' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை மறுத்து ஆணைக்குழுத் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1991 ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில சித்தி பெற்ற மாணவர்கள் இந்த ஆண்டில் பல்கலைக் கழகங்களுக்கு பிரவேசிக்க முடியும்.

1992 ஜி சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை பல்கலைக் கழகங்களுக்கு அடுத்த ஆண்டில் சேர்த்துக் கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கிறது.

இதன் காரணமாக பல்கலைக் கழக அனுமதிகள் 1995 ஆண்டளவில் வழமையான நிலைக்கு வந்து விடும்.

1991 ஆம் ஆண்டு பரீட்சையில் தகுதி பெற்ற மாணவர்களிடமிருந்து பல்கலைக் கழகங்களில் சேருவதற்கான விண்ணப்பங்கள் கோருவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

1991, 1992 ஆம் ஆண்டு பரீட்சையில் தகுதி பெற்ற மாணவர்களை அனுமதிப்பதில் எந்த விதத் தாமதமும் இருக்காது.

1991, 1992 ஆம் ஆண்டுகளில் பல்கலைக் கழகக் கல்வி பெற தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 18 ஆயிரமே; 50 ஆயிரம் அல்ல — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-69)

## வழக்கு வாபஸ்

போதைப்பொருள் வைத்திருந்ததாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் வாஸிம் அக்ரம் உட்பட நான்கு வீரர்கள் மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மேற்கிந்தியப் பொலீஸார் வாபஸ் வாங்கினதாக அறிவிக்கப்படுகிறது- (உ-எ)

## மெய்வல்லுநர் போட்டி

கரவெட்டி மத்தி கேவளை விளையாட்டுக் கழகத்தின்வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் இன்று புதுவருட தினத்தன்று நடைபெறவுள்ளன.

கேவளை விளையாட்டுத் திடலில் திரு. இ. குணசிங்கம் தலைமையில் நடைபெற உள்ள இவ் விழாவில் வடமராட்சி தெற்கு—மேற்கு பிரதேச செயலர் திரு. எஸ். மகேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## "நகர" கப்பல் சேவை: எனக்குத் தொடர்பில்லை

### அரச அதிபர் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஏப். 14

நேற்று முன்தினம் திங்கட்கிழமை திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறைக்கு பயணிகளுடன் வந்து சேர்ந்த ''நகர'' கப்பல் சேவைக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை

இவ்வாறு யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

நகர கப்பலில் பயணிகள் ஏற்றி வரப்படுவார்கள் என்று யாழ்ப்பாணத்துக்குத் தகவல் கொடுக்குமாறு திருகோணமலையில் வைத்து என்னிடம் கேட்கப்பட்டது. அரசாங்க அதிபர் என்ற வகையில் அந்தத் தகவலை அனுப்ப வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது.—

இக்கப்பல் சேவையை ஏற்பாடு செய்வதில் நான் எந்த விதத்திலும் ஈடுபடவில்லை — என்றும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

## ஒருவன் சுகமாக வாழ்வதற்கு பலரின் அனுசரணை தேவை

### சுகவாழ்வு தொடரில் உரை

யாழ்ப்பாணம், ஏப். 13

சுகநலம் என்பது மற்றவர்களுடன் பகிரப்பட வேண்டும். தனிமனிதன் சுகமாக இருக்க முடியாது ஒருவன் சுகமாக இருக்க பலரின் அனுசரணை தேவை.

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கும் சுகவாழ்வு பொது விரிவுரைத் தொடரில் ஆரம்ப உரை நிகழ்த்தும் போது, பல்கலைக்கழக சமூக மருத்துவத் துறைத் தலைவர் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் இவ்வாறு தெரிவித்தார்.

பல்கலைக்கழகப்பதில் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற இத் தொடரில் தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது;

இந்த நாட்டில் எல்லோருமே சுகமாக உள்ளார்கள் என எந்தச் சர்வதேச ஸ்தாபனங்களும் கூற முடியாது. அந்த அளவிற்கு இந்த நாட்டின் நிலை பாதிக்கப்பட்டுள்ளது அரசியல் சமூக, பொருளாதார நிலை, பழக்கவழக்கங்கள், பாரம்பரியம், சௌக்கிய சேவைகள், சூழல் என்பனவே சுகத்தைப் பேணும் காரணிகளாகும் இவை சீர்கெடின் சுகத்தை அழிக்கும் காரணிகளாகவும் அவை மாறி விடும் — என்றார்.

தலைமை உரையாற்றிய பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கூறியதாவது;

பல்கலைக் கழகத்தின் ஊடாக சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் சிறந்த கல்வி அறிவையும் தொழிற்பயிற்சிகளையும் பெற வேண்டும் என்பதால் இதுபோன்ற கற்கை நெறிகளை நடத்தி வருகின்றோம். இளமையில் கல்வியை தவறவிட்டவர்கள் இந்தக் கற்கை நெறிகளில் சேர்ந்து கொண்டால் வளம் பெற முடியும் என்றார்

இணைப்பாளர் திரு. இராசிவசந்திரன் பேசும்போது கூறியதாவது:

இது ஒரு அடிப்படைக் கற்கைநெறி சமூகத்தின் அங்கமான ஒவ்வொரு மனிதனும் இதில் கலந்து கொண்டு பயன் பெற வேண்டும் என்பதால் கிராமங்களின் மத்தியிலும் இந்த நெறி நடைபெறுகிறது. இது ஒரு அர்ப்பணிப்பு என்பதை அனைவரும் உணர்தல் வேண்டும் என்றார். (த-111)

## நாடு பிளவுபடுவதை தடுக்க முற்படவேண்டும்

### புத்தாண்டுச் செய்தியில் பிரேமா

கொழும்பு, ஏப். 14

நாடு பிளவு படுவதைத் தடுக்க முற்படுதல் வேண்டும்- ஜனாதிபதி பிரேமதாஸா தமது புத்தாண்டுச் செய்தியில் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணப் பிரச்சினைக்கு விரைவில் சமாதானத் தீர்வு ஒன்றைக் காணுவதே தற்போதைய அவசரத் தேவையாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

சகல இனமக்கள் மத்தியிலும் சமாதான சகவாழ்வை ஏற்படுத்த வேண்டும் அது பாதுகாப்பு செலவீனத்தைக் குறைக்க வழி கோலும் நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு கூடுதல் நிதியை ஒதுக்குவதற்கு இதன் மூலம் வழி ஏற்படும் அத்துடன் அப்பாவி மக்களின் உயிர்களையும் இதன் மூலம் பாதுகாக்க முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். ஓ-எ

## வீரப்பனின் சகாக்கள் கைவரிசை

சென்னை, ஏப் 14

சந்தனமரக் கடத்தலகாரன் வீரப்பனின் சகாக்கள் கடந்த ஞாயிறு இரவு கர்நாடக மாநில கெள்ளேகால் பகுதியில் வனக் காவலர்களைக் கட்டிப்போட்டு விட்டு —

அவர்களிடம் இருந்த வாக்கி டோக்கி ஒன்றையும் துப்பாக்கி ஒன்றையும் பறித்துச் சென்றதாக பொலீஸார் தெரிவித்தனர் (ஓ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சபாரெத்தினம் இராசம்மா

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சம்பந்தப் பிள்ளையார் கோவில் அருகாமை ஆனைக்கோட்டை மானிப்பாயை வசிப்பிடமாக கொண்டவருமான திருமதி சபாரெத்தினம் இராசம்மா காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஏரம்பபிள்ளை, காலஞ்சென்ற செல்லமுத்து ஆகியோரின் அருமை மகளும், சபாரெத்தினத்தின் அருமை மனைவியும், லீலாவதி, இரத்தினாம்பாள், இராசதுரை (கணக்காளர், கொழும்பு) ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற கோபாலபிள்ளை (ப.நோ.கூ.ச. முகாமையாளர்), சுந்தரலிங்கம் (ஸ்ரீ லங்கா அச்சகம், மேற்பார்வையாளர்), வனிதா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை 15-4-93 வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு காக்கைதீவு கரையாம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சபாரெத்தினம்
(கணவர்)

ஆனைக்கோட்டை,
மானிப்பாய்.
(25247)

## திருமதி. லீலா பொன்னுத்துரை (மேரி திரேசா)

ஆசிர்வாதப்பர் வீதியைச் சேர்ந்த திருமதி லீலா பொன்னுத்துரை (மேரி திரேசா) காலமாகி விட்டார்.

இவர் தா. பொன்னுத்துரையின் (மாநகரசபை ஊழியர்) அன்பு மனைவியும், எமில், ஜஸ்ரின், கசில்டா, லக்சலா ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரான்சிஸ் - சிசிலியா தம்பதிகளின் அன்பு மகளும், கிதாபொன்கலன் (லக்கி ஸ்ரோர்ஸ்), கமலா, விமலா, சேவியர் (லக் மீ ரேடேர்ஸ்), லலிதா ஆகியோரின் சகோதரியும், றெஜி பிளேவியன், மற்றில்டா, மாசில்லாமணி (கிராம அலுவலகர், ஜெயபுரம்), அமலதாஸ் (வைமன் ரோஸ், கொய்யாத் தோட்டம்), சாந்தி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 14-04-93 இன்று புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு நல்லூர் புனித ஆசிர்வாதப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பி, கிதபொன்கலன்
(லக்கி ஸ்ரோஸ்)

9, ஆசிர்வாதப்பர் வீதி,
யாழ்ப்பாணம்.
(25255)

## சோமசுந்தரம் வன்னியசிங்கம்

(முன்னைநாள் விரிவுரையாளர்)

மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவருமான முன்னைநாள் விரிவுரையாளர் திரு. சோமசுந்தரம் வன்னியசிங்கம் 13-4-9[illegible] இல் காலமானார். இவர் கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரி, அக்குவினாஸ் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம் ஆகியவற்றின் முன்னைநாள் கணக்கியல், பொருளியல் விரிவுரையாளராவார்

அன்னார் மட்டுவில் சோமசுந்தரம் தம்பதிகளின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற வேலாயுதம் தம்பதிகளின் மருமகனும், பாரதிதேவியின் அன்புக் கணவரும், இந்திராணி (ஆசிரியை கொக்குவில் இந்துக் கல்லூரி) காராளமூர்த்தி (தொலைத் தொடர்புத் திணைக்களம் கனடா) ஆகியோரின் மைத்துனரும், சண்முகலிங்கத்தின் (இளைப்பாறிய தபாலதிபர்) சகலனும், சந்திரபிரபாவின் (கனடா) சகோதரனும், தேவகி, திருவேணி, கிருஷ்ணவதனா (கொக்குவில் இந்துக் கல்லூரி) தர்ஷினி (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும், சங்கீதா, சாயிராம் (கனடா) ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-4-93 செவ்வாய்க்கிழமை அவரது திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
திருமதி வன்னியசிங்கம்

வைரவர் கடாச்சம்,
பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு.
(21254)

## தில்லையம்பலம் அன்னபூரணம்

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் மணல்தறை லேன் கந்தர்மடத்தை வசிப்பிடமாக கொண்டவருமாகிய தில்லையம்பலம் அன்னபூரணம் காலமானார்.

இவர் கலஞ்சென்ற தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னையா பொன்னாச்சியின் அன்பு மகளும், பொன்னம்மா, நடராஜா, இரத்தினம், மரகதம், இராசம்மா ஆகியோரின் அன்பு தாயாரும், துரைச்சாமி, நாகம்மா, பாலசரஸ்வதி, காலஞ்சென்ற இராசரத்தினம், கோபாலபிள்ளை ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கனகசபை, முத்துக்குமாரு, கணபதிப்பிள்ளை, விசாலாச்சி, சின்னததங்கம், பாரிமுதது ஆகியோரின் அன்பு சகோதரியும், அம்பலவாணர், காலஞ்சென்ற ஆச்சிமுத்து, இளையபிள்ளை, பொன்னம்மா, நாகமுத்து ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மணல்தறைலேனில் உள்ள நடராசா அவர்களின் இல்லத்தில் இன்று (14-04-93) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோம்பயன் மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம்.

தகவல்:
நடராஜா
[மகன்]

43/2 மணல்தறை லேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்
[[illegible]]

---

### மாகாணசபைத் தேர்தல்

# ஐ.தே.க. வெற்றியீட்டினால் நாடாளுமன்றம் கலைப்பு

கொழும்பு, ஏப். 14

எதிர்வரும் மே மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டுமானால் உடனடியாக தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடப்படும்.

அரசுடன் தொடர்புடைய உயர்மட்ட அரசியல்வாதிகளின் கலந்துரையாடல் ஒன்றில் இதுபற்றி ஆராயப்பட்டதாக நம்பத்தகுந்த வட்டாரங்களை ஆதாரம் காட்டி ''லங்காதீப'' சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சி வெற்றி பெற்றால்—

அடுத்து வரும் ஜூன் மாத இறுதியில் நடைபெறவிருக்கும் அரசின் விசேட விழா ஒன்றில் வைத்து நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான பிரகடனம் பற்றி அறிவிக்கப்படும் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அடுத்த ''கம் உதாவ'' கொண்டாட்டம் எதிர்வரும் ஜூன் 3 ஆம் வாரத்தில் — ஜனாதிபதி பிரேமதாஸாவின் பிறந்த நாள் காலத்தில்—மிகிந்தலையில் விமரிசையாக நடைபெறவிருப்பதும்—

அந்தக் கொண்டாட்டங்களில் இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா விசேட விருந்தினராகக் கலந்து கொள்ள இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கவையாகும்.

இதற்கிடையில்—

லலித் தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான எதிர்க் கட்சிகளின் கூட்டணியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களில் தாங்கள் வெற்றி பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றினால், உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு அரசை வற்புறுத்தும் போராட்டங்களை தாம் ஆரம்பிக்க முடிவு செய்திருப்பதாக அறிவித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

(உ-6)

# எதிர்க்கட்சிகள் வென்றால் நாட்டில் "இரண்டு ஆட்சி"

கொழும்பு, ஏப். 14

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் எதிர்க்கட்சிகள் மாகாணசபை நிர்வாகத்தைக் கைப்பற்றும் பட்சத்தில் நாட்டில் 'இரண்டு ஆட்சி' கள் இடம்பெறும் நிலை ஏற்படும், ''ராவய'' வார இதழின் முதல் பக்கத் தலைப்புச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ''ராவய'' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

மாகாணசபைகளுக்கு பொலீஸ் அதிகாரங்கள் உட்பட கல்வி, சுகாதாரம், விவசாயம், போக்குவரத்துத் துறைகள் தொடர்பான அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மாநகர சபைகள், நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகளைக் கலைத்துவிடும் அதிகாரங்களையும் மாகாண சபைகள் பெற்றுள்ளன.

மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெறும் பட்சத்தில் மாநகர, நகர மற்றும் பிரதேச சபைகளைக் கலைத்துவிடப்போவதாக எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன.

ஆயுதப் படைகள் மீதான அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருப்பினும், அந்தந்த மாகாண சட்டம் ஒழுங்கு பராமரிப்பு அதிகாரம் அந்தந்த மாகாண சபைக்கே வழங்கப்பட்டுள்ளது.

எனவே மாகாணசபைத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் வெற்றிபெறும் பட்சத்தில், அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்படும். இதனால் அரசுக்கும் மாகாணசபைகளுக்கும் இடையே ஏற்படும் முட்டுக்கட்டை காரணமாக நாட்டில் பொது மக்கள் மத்தியில் அமைதியின்மையும் பாரதூரமான மோதலும் ஏற்படும்.

இதனால் நாட்டில் 'இரண்டு வித ஆட்சிகள்' நடக்கும் நிலை ஏற்படும்; மத்திய அரசுக்கு எதிரான மக்கள் எதிர்ப்பை கட்டுப்படுத்த முடியாத நிலையும் மத்திய அரசுக்கு ஏற்படும் என்றும் ''ராயவ'' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-எ)

### தேர்தல் முடியும் வரை

# அரச எம். பிக்கள் வெளிநாடு செல்வதற்கு கட்டுப்பாடு

கொழும்பு, ஏப். 14

மாகாணசபைத் தேர்தல் முடிவடையும் வரை அரசாங்கக் கட்சி எம். பிக்கள் வெளிநாடு செல்வது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாகாண சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் மே மாதம் 17 ஆம் திகதி நடைபெற இருப்பது தெரிந்ததே.

[இ எ]

## சடலமாக மீட்பு

விளையாடச் செல்வதாகக் கூறி, மற்றும் இரு சிறுவர்களுடன் சென்ற பத்து வயதுச் சிறுவன் ஒருவன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டான்.

சிறுவர்கள் மூவரும் வளவு ஒன்றுக்குள் தேங்காய் பிடுங்கச் சென்ற சமயம், மேற்படி கரைநகர் பலக்காட்டைச் சேர்ந்த உருத்திரகுமார் இராசகுமார் என்ற சிறுவன் வளவுக்காரரால் துரத்திப் பிடிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. பின்னர் அச்சிறுவன் சடலமாக மீட்கப்பட்டான்.

சந்தேக நபர் எனக்கருதப்படும் வளவுச் சொந்தக்காரர் தலைமறைவாகி விட்டார். தமிழீழ காவல்துறையினர் மேல் விசாரணை செய்கின்றனர்.

சுழிபுரம், வழக்கம்பரையில் நடைபெற்ற இச்சம்பவத்தில், கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட சிறுவனின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

மரண விசாரணை நடத்தப்பட்டது. இறந்த சிறுவனின் தாய் சாட்சியமளித்தார். தீர்ப்பு வழங்குவது ஒத்திவைக்கப்பட்டது.

(உ-5)

## கைது

சென்னை, ஏப் 14

தமிழ்நாடு, பரமக்குடியில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற ஏழு மீனவர்கள் இந்தியத் தமிழ் மீனவர்கள் கச்சதீவுக்கு அருகே இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் [illegible] தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மக்கள் அனைவருக்கும் எமது
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
தெரிவித்துக் கொள்கின்றோம்

※நவநாகரிக பட்டுப்புடைவைகள்
கோவில் தேவைகளுக்குரிய

※ பட்டுக்குடை ※ கொடி
※ ஆலவட்டம் ※ வாகுமாலை

என்பனவற்றை பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்

அஜந்தாஸ்

54 பெரியகடை யாழ்ப்பாணம்
(25166)

# மரண அறிவித்தல்

## திருமதி வீரகத்தி ஆசை

திருமதி வீரகத்தி ஆசை அவர்கள் 13-4-93 அன்று காலமானார்.

அன்னார் துரைராஜா, கனகசபை, சின்னராசா, ராஜேஸ்வரி பிலேந்திரன், சுசிலா, லலிதா, கனகராஜா (கல்வாரி தேவாலய ஊழியர்) ஆகியோரின் தாயாராவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை 14-4-93 மாலை 3-00 மணிக்கு கீழ்க்காணும் விலாசத்தில் நடைபெறும்.

தகவல்:
கல்வாரி தேவாலயம்
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பிடாரி அம்மன் கோவிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(25256)

மேலும் மரண அறிவித்தல்கள் 8 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14 - 04 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org